# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# ANNUAL PERFORMANCE REPORT
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2013








**ශ්‍රී ලංකා ගුවන් හමුදාව**
**இலங்கை விமானப் படை**
**SRI LANKA AIR FORCE**

**உள்ளடக்கம்**


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| 1. | விமானப் படைத் தளபதியிடமிருந்து செய்தி | | 03 |
| 2. | அறிமுகம் | | 04 - 05 |
| 3. | நோக்கு, பணி, முக்கிய ஆற்றல்கள், எங்கள் வகிபாகம் | | 05 |
| | a. | நோக்கு | 05 |
| | b. | பணி | 05 |
| | c. | முக்கிய ஆற்றல்கள் | 05 - 06 |
| | d. | எங்கள் வகிபாகம் | 06 |
| 4. | முகாமைத்துவ சபையும் ஏனைய பிரதான நியமனங்களும் | | 07 - 10 |
| 5. | இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பு | | 10 |
| 6. | பதவியணியின் பலம் | | 10 |
| 7. | 2013 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை | | 11 |
| | a. | நிதிசார் பார்வை | 11 |
| | b. | நிதிசார் நிருவாகம் | 11 - 18 |
| 8. | பணிப்பகங்கள் மற்றும் கட்டளைப் பிரிவுகளின் பொழிப்பு | | 18 |
| | a. | நடவடிக்கைகள் பணிப்பகம் | 18 - 25 |
| | b. | வானூர்திப் பொறியியல் பணிப்பகம் | 26 - 36 |
| | c. | பொதுப் பொறியியல் பணிப்பகம் | 36 - 37 |
| | d. | இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகள் பொறியியல் பணிப்பகம் | 38 - 46 |
| | e. | வழங்கல்கள் பணிப்பகம் | 47 - 48 |
| | f. | நிருவாகப் பணிப்பகம் | 49 |
| | g. | சிவில் பொறியியல் பணிப்பகம் | 50 - 56 |
| | h. | பயிற்சிப் பணிப்பகம் | 57 - 61 |
| | j. | சுகாதார சேவைகள் பணிப்பகம் | 62 - 63 |
| | k. | பல்மருத்துவ சேவைகள் பணிப்பகம் | 64 |
| | l. | நலன்புரிப் பணிப்பகம் | 64 - 66 |
| | m. | நிதிப் பணிப்பகம் | 66 |
| | n. | சிவில் நிருவாகப் பணிப்பகம் | 66 |
| | o. | தரக் காப்பீட்டுக் கட்டளைப் பரிசீலனையகம் | 67 |

| | | | |
|---|---|---|---|
| | p. | நிர்வாகப் படையதிகாரி தலைமையகம் | 68 |
| | q. | ஆட்சேர்ப்புப் பிரிவு | 68 - 69 |
| | r. | ஊடகக் கட்டளை அலகு | 69 |
| | s. | ஆய்வு, அபிவிருத்தி கட்டளை அறை | 70 - 71 |
| | t. | விளையாட்டு கட்டளைப் பிரிவு | 71 |
| | u. | வான் புலனாய்வுப் பகுதி | 71-72 |
| | v. | பறப்புப் பாதுகாப்பு கட்டளைப் பரிசீலனையகம் | 72 |
| | w. | நலன்புரிச் செயற்றிட்ட வேளாண் கட்டளை அலகு | 73-74 |
| | x. | அகக் கணக்காய்வுப் பிரிவு | 75- 76 |
| 9. | திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2013 | | 77 - 85 |
| 10. | வருமானக் கணக்குப் பொழிப்பு 2013 | | 86 - 88 |
| 11. | இலங்கை விமானப் படையால் அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட விசேட சேவைகள் | | 89 - 91 |
| 12. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | | 91 |
| 13. | முடிவுரை | | 92 |
| 14. | சுருக்கக் குறியீடுகள் | | 93-95 |
| 15. | இணைப்புகள் | | 96 |

# விமானப் படைத் தளபதியின் செய்தி



2002 செப்ரெம்பர் திகதியிடப்பட்ட 402 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் முன்வரை செய்யப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொறுப்புக் கூறல், மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்பாட்டிற்கான எங்களது தடுமாற்றமற்ற, உள்ளார்ந்த ஈடுபாட்டைத் தெளிவுபடுத்தும் ஒரு ஆவணமாக 2013 ஆம் பிஸ்கால் வருட இலங்கை விமானப் படையின் (இவிப) *வருடாந்த செயலாற்றுகை அறிக்கை*யினை மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன். நாங்கள் ஒவ்வொரு வருடமும் பொறுப்பேற்றுச் செய்யும் இந்த விரிவான சுய ஆய்வுப் பணிப் பொறுப்பானது நாங்கள் எதை நன்றாகச் செய்கின்றோம், எந்தப் பகுதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும், நாட்டிற்கும் தேசத்திற்கும் சிறப்பான சேவையை வழங்குவதற்கு எவ்வாறு எங்களது இராணுவ சேவையை சிறப்பானதாக்க வேண்டும் போன்ற விடயங்களைத் தெரியப்படுத்துகிறது. இந்த அறிக்கையானது இவிப இன் நிறுவனத் திட்டம் மற்றும் எங்களது பணியின் உறுதியான பொருந்துகையின் மீது அமைந்த இவிப இன் தந்திரோபாய இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை அடைவதை நோக்கிய இவிப இன் முன்னேற்றங்களை அளவிடுகிறது.

இவ்வருட காலப் பகுதியில் இலங்கை அரசாங்கம், யுத்தத்தின் பின்னரான தேசத்தைக் கட்டியெழுப்பும் தேவைப்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இவிப தனது தொடர்ச்சியான ஆதரவினை நல்கியுள்ளது. நாட்டில் சமாதானத்தை வெற்றியீட்டியதன் பின்பு சிவில் முகவராண்மைகளுக்கு உதவி வழங்குவதற்காக இவிப அழைக்கப்பட்டிருந்தது. இத்தகைய சவால்களை இவிப எதிர்நோக்கிய அதே வேளை ஒரு வலிமையான பறப்பு அட்டவணை ஊடாக வெற்றிகரமான நடவடிக்கைகளை அடைதல் எனும் இவிப இன் பிரதான இலக்கின் மீதும் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

பொருளாதார மீட்சி மற்றும் குறைபாடுகளைக் குறைப்பதில் தேசம் கவனம் செலுத்தியிருந்த அதே வேளை விமானப் படையானது தனது போர் நடவடிக்கைகளை நிறைவேற்றிய பின் அதனது வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு உறுதி பூண்டிருந்தது.

அதற்கு மேலும், முறைமைகள் மற்றும் நடவடிக்கைச் செயன்முறைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும் எங்களது அகன்ற நோக்கினை நிதர்சனமாக்கும் பொருட்டும் கடினமான தந்திரோபாயத் தெிவுகளைச் செய்திருந்தது.

ஒவ்வொரு மட்டத்திலும் சிறப்பாக முடிவு எடுப்பதற்கு உதவியாக நிதிசார் தகவல்களின் துல்லியத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் காலவொழுங்கு என்பவற்றை மேம்படுத்தும் அதே நேரம் எங்கள் நிதிசார் அறிக்கையிடல் மற்றும் நிதிசார் முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல் மற்றும் இரகசியத் தன்மையை மேலும் நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக கணக்காய்வு தயார்நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரத்தின் மீதான பணிச் சுமையினைக் குறைக்கும் முகமாக எங்களது வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் முகாமை செய்வதற்கு இலங்கை விமானப் படை செய்த அர்ப்பணிப்பும் உறுதிபூணலும் 2013 ஆம் ஆண்டு வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் பிரதிபலிக்கின்றது. தேசத்திற்கு ஆதரவாக நாங்கள் முன்னெடுக்கும் கொள்பணியினைச் சிறப்பாகச் செய்வதற்கு நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் உறுதியுடன் தொடர்ந்தும் நாங்கள் சேவையாற்றுவோம்.

**கே.ஏ. குணதிலக**

**RWP and Bar, RSP, VSV, USP, MSc (Def. Stud) in Mgt, MSc (Def & Strat Stud), ndc, psc, qfi**
**எயார் மார்ஷல்**
**விமானப் படைத் தளபதி**
2014 மே …..

## 2. அறிமுகம்

தேச வான் சக்தியின் வினைத்திறனான பாவனையில் இவிப இன் பிரதான வகிபாகத்திற்கு மேலதிகமாக தேசிய நோக்கங்களை அடைவதன் பொருட்டு கவனஞ் செலுத்தும் ஆண்டாக 2013 ஆம் நிதியாண்டு காணப்படுகிறது. மனிதாபிமான நடவடிக்கையின் பின்பு, அபிவிருத்திச் செயற்பாடுகளில் தேசிய முயற்சியானது பாரியளவில் இலங்கை விமானப் படையால் முன்னெடுக்கப்பட்டது. இந்தச் செயன்முறையில் இவிப ஆனது மனித மற்றும் நிதிசார் வளங்களில் குறிப்பாக குடியியல் கட்டுமானத் துறையில் பேரளவிலான பங்களிப்பினை நல்கியிருந்தது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தன்னகத்தே கொண்டிருந்த விமானச் சொத்துக்களை நாட்டின் துரித வளர்ச்சிக் கால சுற்றுலாத் துறையுடன் பெரிதும் தொடர்புபட்ட வகையில் தீவு பூராகவும் உள்நாட்டு விமானப் பயணங்களை விருத்தி செய்வதற்கு உச்சளவில் பயன்படுத்தியது. அத்துடன் இயற்கை அனர்த்தத்தின் விளைவாக எழுந்த தேசிய அவசர நிலைமை காரணமாக குடியியல் முகவராண்மைகளுக்கு உதவியும் வழங்கப்பட்டது. அங்கு தேடல், இடர்மீட்பு, தீயணைப்பு நடவடிக்கைகள் போன்றன முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கும் வகையில் அம்பாறை இவிப நிலையத்தில் மீள் கட்டுமானம் செய்யப்பட்ட ஓடுதளம் திறக்கப்பட்டதுடன் இரணைமடு இவிப நிலையத்தில் இவிப ஆல் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது ஓடுதளம் ஒப்படைப்புச் செய்யப்பட்டது.

2013 ஆம் ஆண்டு வருடாந்த செயலற்றுகை அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன, வருடாந்த பாதீட்டுடனான வருடாந்த நடவடிக்கைத் திட்டப் பகுப்பாய்வு, இவிப நிறுவனக் கட்டமைப்புடன் தொடர்புடைய பின்னணித் தகவலுடன் ஆண்டிறுதியில் இவிப நடவடிக்கைகள் மற்றும் திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் நடவடிக்கைசார் பகுப்பாய்வு என்பனவாகும்.

### a. பகுதி ஒன்று : வருடாந்தப் பாதீட்டுடனான வருடாந்த நடவடிக்கைத் திட்டப் பகுப்பாய்வு

(1) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் வருடாந்தப் பாதீட்டின் அதே அடிப்படையின் மீது உருவாக்கப் பட்டுள்ளது. இவ்வறிக்கை *2012 – 2015 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் திட்டத்தில்* அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிரான செயலாற்றுகையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியும் அதன் முற்பகுதியில் ஒரு சிறிய செயலாற்றுகைப் பொழிப்பினையும் மதிப்பீட்டையும் கொண்டிருக்கின்றது. மேலும் ஆண்டின்போதான பாதுகாப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளில் சில பொருத்தமான விடயங்கள் மீது ஒரு கட்டுரையைப் பின்புலமாகக் கொண்டிருக்கிறது.

(2) வருடாந்த அறிக்கையானது திணைக்களம் ஒழுங்கமைக்கப்பட்ட தடத்தில் வளர்ந்து வரும் உயர்மட்ட முன்னுரிமைகள் மற்றும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக அதிக நேரம் ஆற அமரச் சிந்தித்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் சீராக இருக்கும் என்ற போதிலும் உயர்மட்ட ஆதரவு நோக்கங்கள் மற்றும் வழிகளில் ஒரு வருடாந்தப் பாதீட்டிலிருந்து அடுத்ததிற்கு ஒரு குறிப்பிட்டளவு மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கின்றன. அவையும் இணைவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(3) இலங்கை விமானப் படையின் நோக்கங்கள் நிறுவனத் திட்டத்தில் அதியுயர் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் வருடாந்த அறிக்கையானது 2012 – 2015 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிரான 2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒரு செயலாற்றுகைப் பொழிப்புடன் ஆரம்பிக்கிறது. செலவு மீளாய்வானது அறிக்கை நெடுகிலும் தரப்பட்டுள்ளது.

**b.** **பகுதி இரண்டு : திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2013**

(1) ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட, நிலைநிறுத்தப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட வள விபரங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் அவை பயன்படுத்தப்பட்ட வழிகளையும் தயாரிப்பதற்கு திணைக்களம் தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒதுக்கீட்டுக் கணக்கு, நிதிப் பிரமாணங்கள் மற்றும் திறைசேரி வழிகாட்டல் களுக்கு இணங்க காசு அடிப்படையின் மீது தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) நிதியாண்டிற்காக திணைக்கள விவகாரங்கள், மொத்த வள விளைவு, நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள், அங்கீகரிக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் இழப்புகளுடன் காசுப் பாய்வுகள் பற்றி கூறப்படுவதில் உண்மையான, நேர்மையான பார்வையினை அவை கொண்டிருத்தல் வேண்டும். 2013 ஆம் ஆண்டிற்கான திணைக்கள ஒதுக்கீட்டுக் கணக்குகள் இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

## 3. நோக்கு, பணி, முக்கிய ஆற்றல்கள் மற்றும் எங்கள் வகிபாகம்

**a.** **நோக்கு**

‘‘விமான சக்தியின் வினைத்திறனான பணியினூடாக தேசிய பாதுகாப்பினை நிச்சயப்படுத்தல்’’'

**b.** **பணி**

‘‘தேசிய பாதுகாப்புக்கு ஆதரவளிப்பதற்கான வான் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்பதற்கு ஒரு தொழில்வாண்மையான துணிகர விமானப் படைக்குத் தேவையான பயிற்சிக்குத் தயார்படுத்தல்’’

**c.** **முக்கிய ஆற்றல்கள்**

(1) இலங்கையினுள் பறப்பில் ஈடுபடும் எந்தவொரு எதிரி விமானத்தையும் அல்லது இலங்கை வான் பரப்பில் ஊடுருவ எத்தனிக்கும் எந்தவொரு எதிரி விமானத்தையும் கண்டுபிடித்தல், அடையாளப்படுத்தல், அழித்தல்.

(2) இலங்கையின் நிலப் பரப்பின் மீதான தந்திரோபாய மற்றும் செயல் உத்தி சார்ந்த வான் பரப்பு நுணுக்கக் கண்காணிப்பும் இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளும் (EEZ உள்ளடங்கலாக).

(3) ESM, ECM, EPM ஊடாக நட்புப் படைகளால் பயன்படுத்தத்தக்க வகையிலும் எதிரிப் படைகளால் பயன்படுத்தப்படாதிருக்கும் வகையிலும் மின்காந்தக் கற்றையினை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துதல்.

(4) இலங்கையின் நிலப் பரப்பு மற்றும் நீர்ப் பரப்பினைச் சகல காலநிலைகளிலும் இரவு – பகலாக தக்கவைத்துக்கொள்ளத் தேவைப்படும் தாக்கும் வல்லமைத் திட்ப நுட்பங்கள்

(5) நட்புப் படைகள் மற்றும் சிவில் அதிகாரசபை (MACA) நடவடிக்கைகளுக்கான இராணுவ உதவியின்போது சகல காலநிலைகளிலும் இரவு பகலாக தந்திரோபாய நடவடிக்கைசார்ந்த மற்றும் செயல் உத்தி சார்ந்த விமான ஏற்றியிறக்கல்கள்

(6) முக்கியமான விமானப் படைச் சொத்துக்கள் மற்றும் நிறுவுகைகளுக்கான விரிவான படைப் பாதுகாப்பு

(7) சகல காலநிலைகளிலும் இரவு – பகலான நடவடிக்கைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு வசதிகள் உள்ள, ஆயத்தப்படுத்தப்பட்ட பல்வகை அடிப்படைகளைப் பராமரிப்பதன் மூலமான நடவடிக்கைகளை மிகைப்படுத்தல்

(8) சாதாரண காலநிலையில் இரவு – பகலாக SAR, CASEVAC மற்றும் விமானப் பராமரிப்பு நடவடிக்கைகளை நடத்துதல் ;

(a) கொழும்பு FIRE இனுள் அனர்த்தத்திற்குள்ளான பயணிகள் விமானத்தில்/ கப்பலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 300 வரையானோருக்கான உதவி.

(b) இலங்கைக்குள் மற்றும் SAARC பிராந்தியத்திற்குள் எங்காவது நடக்கும் ஒரு இயற்கை அனர்த்த சம்பவத்தில்

(c) கரையோர நடவடிக்கைக்கான ஆதரவில்

(d) பிராந்தியத்தினுள் VVIP போக்குவரத்து

(e) இணையப் பரப்பில் நட்புப் படைகள் சுதந்திரமாக இயங்குவதை நிச்சயப்படுத்திக் கொள்வதும் எதிரிப் படைகள் அதைப் பயன்படுத்துவதைத் தடுத்தலும்

**d. எங்கள் வகிபாகம்**

(1) தரை மற்றும் கடற்படையினருக்கு போர்த்திறஞ் சார்ந்த வான் ஆதரவு மற்றும் போக்குவரத்தினை வழங்குதல்

(2) அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இடர்மீட்பு வசதிகள் மற்றும் போக்குவரத்தினை வழங்குதல்

(3) விமானப் பராமரிப்பு, வீதிப் போக்குவரத்து, இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய பொறி மற்றும் இயந்திரங்களுக்கு பொறியியல் மற்றும் வழங்கல் சேவைகளை அளித்தல்

(4) உள்ளகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக துருப்புகளை வழங்குதல்

(5) தேசிய அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட படை நடவடிக்கை அல்லாத வான் நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு, அபிவிருத்திச் செயற்றிட்ட முன்னெடுப்புகளைப் பொறுப்பேற்றல்

## 4. முகாமைத்துவ சபையும் பிற பிரதான நியமனங்களும்

### a. முகாமைத்துவ சபை

விமானப் படையானது ஒரு முகாமைத்துவ சபையினால் ஆளப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டு முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பின்வருமாறு.

**விமானப் படைத் தளபதி**

எயார் மார்ஷல் எச்டி அபேவிக்கிரம RWP and Bar, RSP, VSV, USP, MSc (Def Stud) in Mgt, M.A(London) rcds, psc, qfi.

**தலைமை அதிகாரி**

எயார் வைஸ் மார்ஷல் கேஏ குணதிலக RWP and Bar, RSP, VSV, USP, MSc (Def. Stud) in Mgt, MSc (Def & Strat Stud), ndc, psc, qfi

**நடவடிக்கைகள் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் ஜிபி புளத்சிங்கள RWP, RSP, USP, M.Sc. (Def. Stu) in Mgt, M Phil, ndc, psc

**வானூர்திசார் பொறியியல் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் பிடிஜே குமாரசிறி USP, MAIAA, AMRACS, EDBA, psc,

**பொதுப் பொறியியல் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் எல்எச்ஏ சில்வா USP, BSc (Gen), fndu (China)

**இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் பொறியியல் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் ஆர்ஜே பத்திரகே USP, BSc. (Eng), M Eng, C.Eng MIE (SL), nds

**வழங்கல்கள் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் கேவிபி ஜயம்பதி WWV, RWP, RSP///, M.Sc.(International Relations), M Sc (Def Strat Stu) MIM (SL), fndu, qhi

**நிர்வாகப் பணிப்பாளர்**

எயார் கொமதோர் ஜேஎஸ்ஜ விஜேமன்ன USP, M.Sc. (Def & Strat Studies), DPM-NIBM, psc (09.12.13 வரை)

எயார் கொமதோர் சிபி வெலிகல USP (w.e.f. 10.12.13)

**சிவில் பொறியியல் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் சிஆர் குருசிங்க WWV, RWP, RSP, BSc (Hons) (Def&Strat Stu) aowc, ndc.

**சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

எயார் கொமதோர் டிஎம்எஸ் கருணாரத்ன MBBS (Sri Lanka), MSc (Def Stu) in Mgt, MDS, D.Av.Med, psc

**பல்மருத்துவக் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் டபிள்யுகேஎம் வீரசேகர

**பயிற்சிப் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் கே ஜகம்பத் USP M.Sc.(Def. Stu) in Mgt, psc

**நலன்புரிப் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் டபிள்யுஏ சில்வா VSV, USP, psc, (13.03.13 வரை)

எயார் வைஸ் மார்ஷல் எம்எல்கே பெரேரா USP (14.03.13 முதல்)

**b. ஏனைய பிரதான நியமனங்கள்**

**நிதிப் பணிப்பாளர்**

திரு. டபிள்யுடிஆர் வீரசுந்தர B.Com (Sp), HNDC, HNDA, M.Sc. (Mgt) PGDM (CA), Attorney- at- Law, LICA (18.09.2013 வரை)

திருமதி. எம்என்பி பெர்னாண்டோ (19.09.2013 முதல்)

**சிவில் நிர்வாகப் பணிப்பாளர்**

திரு. டிபி விக்கிரமசிங்க B.Sc (Sp)

**தொண்டர் விமானப் படை கட்டளை அதிகாரி**

எயார் கொமதோர் ஜேஎஸ்ஜ விஜேமன்ன USP, M.Sc. (Def & Strat Studies), DPM-NIBM, psc

**தரக் காப்பீட்டுக் கட்டளை அதிகாரி**

எயார் கொமதோர் ஏடபிள்யுஈ விஜேசூரிய M.Sc. (Def Studies ) in Mgt ,MSc (MOA),MDS, psc (13.08.2013 வரை)

குறூப் கப்டன் ஏஎச் விஜேசிறி USP, B.Sc (Gen), psc (14.08.2013 முதல்)

**தலைமைக் நிர்வாகப் படை அதிகாரி**

எயார் கொமதோர் சிபி வெலிகல

**சட்டப் பணிப்பாளர்**

குறூப் கப்டன் பிஎஸ்எஸ் த சில்வா LLM(UK) Attorney-at Law

**பாதீட்டுப் பணிப்பாளர்**

குறூப் கப்டன் டபிள்யுஎம்கேஎஸ்பி வீரசிங்க MBA,MSc,(Def & Strat Stu),BA (DEF Studies),psc MISMM,MIM(SL)

**ஆட்சேர்ப்புக் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் எச்என் அபேசிங்க MBA (07.10.2013 வரை)

எயார் கொமதோர் சி.பி. லவ்றோய் WWV,RSP,USP (w.e.f. 08.10.2013)

**விளையாட்டுகள் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் ஆர்ஜிசிடி ரவிஹன்சா

**அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் ஆர்பிரி கூரே USP

**நலன்புரிச் செயற்றிட்டங்கள் கட்டளை அதிகாரி**

எயார் கொமதோர் டபிள்யுஎல்ஆர்பி ரொட்றிக்கோ USP, GI Fire E, MDS, psc

**ஊடகக் கட்டளை அதிகாரி**

எயார் கொமதோர் ஏடபிள்யுஈ விஜேசூரிய M.Sc. (Def. Stu) in Mgt, M.Sc.(MOA), MDS, psc

**ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் ரிஜிஜே அமரசேன B.Sc.(Gen)

**கணக்காய்வுக் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் சிஎச்ஆர் சொய்சா BA (Def Stu), M Sc (Def & Strat Stu), psc

**புனலாய்வுக் கட்டளை அதிகாரி**

குறூப் கப்டன் டிசிஜ வீரசூரிய psc

**கட்டளை அகக் கணக்காய்வாளர்**

ஸ்குவாட்ரன் லீடர் ஆர்ஆர் சோமதிலக MBS (Col), B.Com (Sp) Hons (Col), CBA (CA), MAAT (SL)

## 5. இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பு

இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பானது இணைப்பு ‘A’ ஆக இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டிருக்கிறது.

## 6. பதவியணியின் பலம்

2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான இலங்கை விமானப் படையின் பதவியணி விபரம் கீழே அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | மேலதிகம்/ (வெற்றிடம்) |
|---|---|---|---|
| அதிகாரிகள் | 1,786 | 1,755 | (31) |
| ஏனைய தரத்தினர் (வழக்கமுறை) | 33,523 | 22,473 | (11,050) |
| (தொண்டர்) | 2,691 | 13,136 | 10,445 |
| சிவில் பதவிநிலை அதிகாரிகள் | 16 | 5 | (11) |
| சிவில் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் | 199 | 106 | (93) |
| சிறு பணியாளர்கள் | 3,302 | 2,709 | (593) |
| **மொத்தம்** | **41,517** | **40,184** | **(1,333)** |


**அட்டவணை: 1**

இலங்கை விமானப் படையின் தற்போதைய பதவியணியானது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து சற்று வேறுபட்டதாகும். 2013 ஆம் ஆண்டின் முடிவில் 1,333 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இலக்குகளை அடைவது விமானப் படைக்கு ஒரு சவாலாக அமைந்திருந்தது.

## 7. 2013 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

### a. நிதிசார் பார்வை

இலங்கை விமானப் படை 2013 ஆம் ஆண்டிற்கான மொத்த பாதுகாப்புச் செலவினத்திற்காக 41,526.74 மில்லியன் இலங்கை ரூபாயினை முற்கணிப்புச் செய்திருந்தது. அதன் பிற்பாடு, நடவடிக்கைக்கான மேலதிகச் செலவைக் கருத்திற்கொண்டு 3,370.85 மில்லியன் இலங்கை ரூபாய் கூடுதல் ஏற்பாடு வடிவத்தில் வழங்கப்பட்டிருந்தது. கூடுதல் ஏற்பாடுகள் உள்ளிட்ட மொத்த நிகர ஏற்பாடு 44,897.59 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது. ஆண்டிற்கான உண்மையான மொத்த பாதுகாப்புச் செலவு 34,218.76 மில்லியன் இலங்கை ரூபாயாக அமைந்திருந்தது. இதில் 27,641.07 மில்லியன் இலங்கை ரூபாய்கள் மீண்டுவரும் செலவையும் 6,577.69 மில்லியன் இலங்கை ரூபாய்கள் மூலதனச் செலவையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. மொத்த நிகர ஏற்பாடு மற்றும் உண்மையான செலவு என்பன முறையே 82% மற்றும் 41% இனால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. எவ்வாறெனினும், 2013 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த பாதுகாப்புச் செலவு பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளினுள் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் மொத்தக் கட்டுப்பாடும் இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.





### b. நிதிசார் நிருவாகம்

#### (1) மீண்டுவரும் செலவு

தனியாள் ஊதியங்கள் மற்றும் ஏனைய மீண்டுவரும் கட்டணங்களை உள்ளடக்கி 2013 ஆம் ஆண்டிற்காக 27,539.67 மில்லியன் இலங்கை ரூபாய்கள் இவிப இன் மீண்டுவரும் செலவாக ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கூடுதல் ஏற்பாடுகள் உள்ளடங்கலாக மொத்த நிகர ஏற்பாடு 27,864.67 மில்லியன் இலங்கை ரூபாயாக அமைந்திருந்தது. இங்கு உண்மையான செலவாக 27,641.07 மில்லியன் இலங்கை ரூபாய் இருந்தது. மொத்த மதிப்பீட்டிற்கும் அரசாங்க ஒதுக்கீட்டின் ஊடாக நிதியளிப்புச் செய்ய

எதிர்பார்க்கப்பட்டது. பின்வரும் செலவு உருப்படிகள் குறித்தான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

| | **இல.ரூ.(மில்.)** |
|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 20,465.66 |
| ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 7,074.01 |
| **மொத்தம்** | **27,539.67** |
| **திருத்தப்பட்ட (கூடுதல்) மீண்டுவரும் ஏற்பாடு** | **325.00** |





(2) **மூலதனச் செலவு**

இலங்கை விமானப் படைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு, படைத்துறை சார்ந்த மற்றும் சிவில் உத்தியோகத்தர்களின் ஆளுமையினை கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்கான ஒரு பார்வையுடன் 13,987.08 மில்லியன் இலங்கை ரூபாயிலான ஒரு மொத்த மூலதனச் செலவுக்கான முற்கணிப்பினை இலங்கை விமானப் படை கொண்டிருந்தது. எவ்வாறெனினும், 3,045.85 மில்லியன் இலங்கை ரூபாய் எனும் கூடுதல் ஏற்பாட்டுடன் 17,032.93 மில்லியன் இலங்கை ரூபாய் எனும் மொத்த மூலதனச் செலவிற்கான அங்கீகாரம் திறைசேரியால் வழங்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிற்கான மொத்த நிகர ஏற்பாடு 366.67% இனால் அதிகரித்திருந்தது.

அதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு பின்வருமாறு;

| | **இல.ரூ.(மில்)** |
|---|---|
| மூல ஏற்பாடு | 13,987.08 |
| கூடுதல் ஏற்பாடு | 3,045.85 |
| **திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு** | **17,032.93** |

மேலும், 2013 ஆம் ஆண்டிற்கான உண்மைச் செலவு 6,577.69 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது. இது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 103% அதிகரிப்பைக் காட்டியிருந்தது.




(a) **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்**

வெற்றிக்கு இட்டுச்செல்லக்கூடிய சொத்துக்களின் அடிப்படையான மற்றும் அதனது தடங்கலற்ற நடவடிக்கையினைப் பேணுவதன் மீதான ஒரு பார்வையுடன் ஆண்டின் காலப்பகுதியில் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக 3,091.00 மில்லியன் இலங்கை ரூபாயினை இலங்கை விமானப் படை ஆரம்பத்தில் முற்கணிப்புச் செய்திருந்தது. அதன் பின், திறைசேரியால் 62.60 மில்லியன் இலங்கை ரூபாய் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக மொத்த நிகர ஏற்பாடு 3,153.60 மில்லியன் இலங்கை ரூபாவாகியது. 2012 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு 175% இனால் தீர்க்கமாக அதிகரித்திருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவு 1,296.03 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது.

(b) **நிலையான சொத்துக்களின் கொள்வனவு**

இலங்கை விமானப் படையானது பிரதானமாக விமானங்கள், உபகரணங்களும் தளபாடங்களும் மற்றும் பார இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை 1,350.00 மில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியில் பெற்றுக் கொள்வதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தது. நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காக 1,617.50 மில்லியன் இலங்கை ரூபாயின் ஒரு ஆரம்ப ஒதுக்கீட்டிற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பின், கூடுதல் ஏற்பாடுகள் என்ற ரீதியின் 333.25 மில்லியன் இலங்கை ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், நி.பி. 66 மற்றும் 69 இன் படி, மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிலிருந்து இயலுமையைக் கட்டியெழுப்பு வதற்காக இவ்வாண்டின் காலப்பகுதியில் 100.00 மில்லியன் இலங்கை ரூபாய் மாற்றீடு செய்யப்பட்டதன் விளைவாக நிகர ஒதுக்கீடு 1,583.25 மில்லியன் இலங்கை ரூபாயாக மாறியது. அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட தொகை 21% இனால் குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான உண்மைச் செலவு 1,583.25 மில்லியன் இலங்கை ரூபாயாக அமைந்திருந்தது.

(c) **இயலுமையைக் கட்டியெழுப்பல்**

மூலதனச் செலவின் கீழ் இயலுமையைக் கட்டியெழுப்பு வதற்காக 150.00 மில்லியன் இலங்கை ரூபாயை இலங்கை விமானப் படை ஆரம்பத்தில் முற்கணிப்பு செய்திருந்தது. எவ்வாறெனினும், 50.00 மில்லியன் இலங்கை ரூபாய் எனும் ஒரு கூடுதல் ஏற்பாடு மற்றும் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட (நி.பி. 66, 69 இற்கிணங்க) 100.00 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகியவற்றால் மொத்த நிகர ஏற்பாடு 300 மில்லியன் இலங்கை ரூபாயாகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டிற்கான உண்மைச் செலவு 279.32 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது.


(d) **ஏனைய மூலதனச் செலவுகள்**

மூலதனச் செலவின் கீழ், ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட 9,396.08 மில்லியன் இலங்கை ரூபாவையும் கூடுதல் ஏற்பாடான 2,600.00 மில்லியன் இலங்கை ரூபாவையும் உள்ளடக்கிய மொத்த நிகர ஏற்பாடான 11,996.08 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு எதிரான ஏனைய மூலதனச் செலவாக (முதலீடுகள்) 3,795.97 மில்லியன் இலங்கை ரூபாய் எனும் ஒரு தொகை இலங்கை விமானப் படையால் வருவித்துக்கொள்ளப்பட்டது.

(e) **மீண்டுவரும் செலவு வகைகளின் கீழ், ஏற்பாடுகளுக்கு எதிரான செலவு**

| உருப்படி விபரம் | நிகர ஏற்பாடு (இல.ரூ.மில்.) | செலவு (இல.ரூ.மில்.) | வேறுபாடு |
|---|---|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 21,249.44 | 21,139.44 | 110.00 |
| வேறு மீண்டுவருதல் | 6,615.22 | 6,501.62 | 113.60 |
| **மொத்தம்** | **27,864.66** | **27,641.06** | **223.60** |


`அட்டவணை: 2




(f) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் விடயத்தில் மூலதன வகையின் கீழான ஏற்பாடுகளுக்கு எதிரான செலவு (ஒவ்வொரு நோக்கக் குறியீட்டிற்கும்)

| நோக்கக் குறியீடு | உருப்படி விபரம் | நிகர ஏற்பாடு (இல.ரூ. மில்.) | செலவு (இல.ரூ. மில்.) | வேறுபாடு (இல.ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| | **<u>மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்</u>** | | | |
| 2001 | கட்டடமும் கட்டமைப்பும் | 115.00 | 68.13 | 46.87 |
| 2002 | இயந்திரமும் பொறியும் | 2,948.60 | 1,172.48 | 1,776.12 |
| 2003 | வாகனம் | 90.00 | 55.42 | 34.58 |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | |
| 2101 | வாகனம் | 113.25 | 113.16 | 0.09 |
| 2102 | தளபாடமும் பொருத்துகளும் | 100.00 | 85.03 | 14.97 |
| 2103 | இயந்திரம், பொறி, உபகரணம் | 550.00 | 326.53 | 223.47 |
| 2104 | கட்டடமும் கட்டமைப்பும் | 820.00 | 681.64 | 138.06 |
| 2401 | இயலுமையைக் கட்டியெழுப்பல் | 300.00 | 279.32 | 20.68 |
| 2502 | வேறு மூலதனச் செலவு | 11,986.08 | 3,795.97 | 8,200.10 |
| **மொத்தம்** | | | **6,577.69** | **10,455.23** |


**அட்டவணை : 3**




(g) **வருமானக் கணக்குகள் விடயத்தில் முன்கணிக்கப்பட்டதற்கு எதிரான உண்மைச் செலவு**

| வருமானக் குறியீடு | 2013 ஆம் ஆண்டிற் காகப் பாதிடப்பட்ட வருமானம் (இல.ரூ. மில்.) | 2013 ஆம் ஆண்டிற்கான உண்மை வருமானம் (இல.ரூ. மில்.) | வேறுபாடு (இல.ரூ. மில்.) |
|---|---|---|---|
| 2003-20-16 | 180.00 | 202.79 | 20.79 |
| **மொத்தம்** | **180.00** | **202.79** | **20.79** |

**அட்டவணை : 4**





(h) **முற்பணக் கணக்குகள் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிரான உண்மை நிலை**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடன்களை வழங்குவதற்காக இலங்கை விமானப் படை ஒரு முற்பணக் கணக்கினை வைத்திருக்கிறது. இவிப முன்வரை செய்யப்பட்ட முற்பணக் கணக்கின் எல்லைகளுடன் இணக்கத்தைக் கொண்டிருந்தது. இந்தக் கணக்கு நடவடிக்கைகள் பின்வருமாறு:

| **விபரம்** | **குறித்துரைக்கப்பட்ட நடப்பு வருட எல்லை (இல.ரூ. மில்.)** | **நடப்பு வருட உண்மை நிலை (இல.ரூ. மில்.)** | **வேறுபாடு (இல.ரூ. மில்.)** |
|---|---|---|---|
| **இல.:22401 முற்பணக் கணக்கு "பி"** | | | |
| உயர்ந்தபட்ச செலவு எல்லை | 510.00 | 224.91 | 285.64 |
| குறைந்தபட்ச வரவு எல்லை | 370.00 | 376.02 | (6.53) |
| உயர்ந்தபட்ச பற்று எல்லை | 1,739.00 | 728.97 | 1,010.03 |

**அட்டவணை : 5**




(j) **ஒதுக்கீட்டுக் கணக்கு - 2013**

2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு 2014 மார்ச் 18 ஆம் திகதியன்று தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் (CAO) சமர்ப்பிக்கப்பட்டது.

**8. பணிப்பகங்கள் மற்றும் கட்டளைப் பிரிவுகளின் 2013 ஆம் ஆண்டு செயலாற்றுகைகளின் பொழிப்பு**

இலங்கை விமானப் படையின் *நிறுவனத் திட்டம்* மற்றும் *வருடாந்த நடவடிக்கைத் திட்டம்* என்பவற்றில் அமைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதன் பொருட்டு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் கொள்பணிகள் இலங்கை விமானப் படையால் நிறைவேற்றப்பட்டிருந்தன.

**a. நடவடிக்கைகள் பணிப்பகம்**

நடவடிக்கைகள் பணிப்பகத்தின் நேரடிப் பார்வையின் கீழ் இலங்கை விமானப் படையின் நடவடிக்கைசார்ந்த செயல் எல்லை வருகிறது. பணிப்பகமானது அதற்குரிய பிரதிப் பணிப்பாளர்களின் ஊடாக பின்வரும் விடயப் பரப்புகளுக்கு பொறுப்புடையதாக இருக்கிறது:

(1) வான் நடவடிக்கைகள்
(2) தரை நடவடிக்கைகள்
(3) வான் பாதுகாப்பு

நடவடிக்கைகள் பணிப்பகத்தின் ஒட்டுமொத்தப் பாதீடு 34.00 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது. ஒட்டுமொத்த மதிப்பீட்டுத் தொகையில் 12.00 மில்லியன் இலங்கை ரூபாயினை வான் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட அதே நேரம் 22.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் தரை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டன. வான் நடவடிக்கைகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில் இருந்து தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக 3.00 மில்லியன் இலங்கை ரூபாய் வழங்கப் பட்டிருக்கின்றன. ATC மற்றும் வான் களப் பாதுகாப்புக்காக 5.00 மில்லியன் இலங்கை ரூபாய் ஒதுக்கப்பட்ட அதே வேளை வான் புலனாய்வுக்காக 3.50 மில்லியன் இலங்கை ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், தரை நடவடிக்கை களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 22 மில்லியன் இலங்கை ரூபாய், பாதுகாப்பு உபகரணம் மற்றும் பாதுகாப்புப் பொருட்கள், விமானப் படை நாய்கள், நாய்க் கூட்டிற்கான உபகரணம், வெடிபொருட்கள் கட்டளைச் சாதன (EOD) உபகரணம் மற்றும் பரசூட் உபகரணம் போன்றவற்றுக்காக எறிவு செய்யப்பட்ட பெறுமதிகளைக் கொண்டிருக்கிறது.

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப இன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எறிவு செய்யப்பட்டிருக்கும் நடவடிக்கைகளில் பெரும்பாலானவற்றை பணிப்பகம் நிறைவு செய்திருக்கும் அதே வேளை சில நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சொற்பளவான நடவடிக்கைகள் தந்திரோபாய மாற்றம் காரணமாக நிறைவு செய்யப்படவில்லை.

### (1) 2013 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் பிரதான செயற்றிட்டங்கள்

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 2.89 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில் தீ அலார முறைமை, கூஸ் கழுத்துகளின் கொள்வனவு, தீ அணைப்பிகள் கொள்வனவு, தீ அணைப்பு உபகரணங்களின் பழுதுபார்ப்பு போன்றவை உள்ளடங்கலான தீ அணைப்பு நடவடிக்கைகளை பணிப்பகம் நிறைவு செய்திருந்தது. இதற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவு 3.00 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது. மேலும், வான் புலனாய்வின் கீழ் விசேட புலனாய்வுப் படியாக 1.41 மில்லியன் இலங்கை ரூபாய் பணிப்பகத்தால் எறிவு செய்யப்பட்டிருந்த நிலையில் தேவைப்பட்ட போதெல்லாம் வழங்கப்படும் தகவல்களுக்கான கொடுப்பனவாக 0.73 மில்லியன் இலங்கை ரூபாய் மட்டுமே உண்மையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும், தரை நடவடிக்கைகளுக்காக எறிவு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் 2.47 மில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியான நடவடிக்கை களை பணிப்பகம் நிறைவு செய்திருந்தது.

### (2) 2013 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிராத அல்லது நிறைவுறுத்தப்பட்டிராத நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இவிப இன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் 90 பெரிய காற்று சொக்சுகள், 10 காற்று வேகமாக்கிகள் மற்றும் திசைகாட்டிகள், சிறு விமான நிலைய அடையாள கலங்கரை விளக்கங்கள் மற்றும் வெப்பமானி ஆகியவற்றை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கு 5.00 மில்லியன் இலங்கை ரூபாயினை பணிப்பகம் எறிவு செய்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை. காற்று சொக் (sock) இனை உள்நாட்டில் தயாரிப்பதானது நடைமுறையில் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் இருப்பதன் காரணமாக இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. காற்று வேகமாக்கி மற்றும் திசைகாட்டியின் விலைமனுக் கோரலானது கோரப்பட்ட பொருட்களின் விலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக இரத்துச் செய்யப்

பட்டுள்ளதுடன் அவை புதிய விவரக் குறிப்புடன் வழங்கப்படும். ஒப்படைப்புக் காலம் முடிந்து 14 மாதங்கள் கடந்தும்கூட காற்று வேகமாக்கி மற்றும் திசை காட்டியினை ஒப்படைப்பதற்கு வழங்குநர்கள் தவறியிருந்தனர். எனவே, அந்தக் கட்டளையினை இரத்துச் செய்து மீண்டும் விலைமனு கோருவதற்கு பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் விலை அதிகமாக இருத்தமை, பொருட்களின் தரம் தொடர்பில் காப்பீடு வழங்கப்படாது இருந்தமை, வாணிபப் பெயர் குறிப்பிடப்படாது இருந்தமை போன்ற காரணங்களால் வெப்பமானிகளுக்கான விலைமனுக் கோரலை (வெளிநாட்டுக் கேள்வி) இரத்துச் செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டது. மேலும், 0.50 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில் கொள்வனவு செய்வதற்காக எறிவு செய்யப்பட்டிருந்த விமான அகப் பணியாளர்கள் மின்பொறிக் கைவிளக்கு (டோச்) மற்றும் 0.81 மில்லியன் இலங்கை ரூபா செலவில் கொள்வனவு செய்வதற்காக எறிவு செய்யப்பட்டிருந்த வான் புலனாய்வு உபகரணங்கள் ஆகியன 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்படவில்லை. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக நிதி வரையறை காரணமாக முன்னெடுக்கப்படாதிருந்த 19.14 மில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியிலான தரை நடவடிக்கைச் செயற்பாடுகள் 2014 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன.

### (3) 2013 ஆம் ஆண்டின் நடவடிக்கை சார்ந்த செயலாற்றுகைகள்

இலங்கை விமானப் படை 2013 ஆம் ஆண்டில் VVIP / VIP பயணங்கள், தேடுதல் மற்றும் இடர்மீட்பு நடவடிக்கைகள், கரையோர நடவடிக்கைகள், பரீட்சிப்புகள், பயிற்சிகள் மற்றும் வர்த்தக நோக்கங்கள் போன்ற பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக அதன் நிரந்தர இறக்கை மற்றும் சுழல் இறக்கை கொண்ட இரு வகையான விமானத் தொகுதிகளையும் ஈடுபடுத்தியிருந்தது. செஸ்னா 150, PT-6, K-8, செஸ்னா - 421, C-130, பெல் 412, பெல் 212, பெல் 206, MI-17, F-7, Y-12, B-200, MI-24/35, கிபீர், மிக்- 23, மிக் - 27, SEARCHER MK II, BH-II UAV, மற்றும் MA-60 ஆகிய பல்வேறு வகைப்பட்ட விமானங்களையும் பயன்படுத்தி 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக **10,283.37** பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப் பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப யினால் பறக்கப்பட்ட அதியுயர் மணித்தியாலமான 1,849.10 பறப்பு மணித்தியாலம் Y – 12 விமானத்தைப் பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்திற்காக பறக்கப்பட்டதாகும். இந்த Y-12 விமானங்கள் இலங்கை விமானப் படையின் 8 ஆம் இலக்கப் படையணியால் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டதாகும்.



இரண்டாவது அதியுயர் பறப்பு மணித்தியாலமான 1,463.23 மணித்தியாலங்கள் இலங்கை விமானப் படையால் எம்.ஐ. 17 விமானத்தைப் பயன்படுத்தி பறக்கப்பட்டதாகும். மொத்தமான இந்த 1,463.23 பறப்பு மணித்தியாலங்களில் 110.25 மணித்தியாலங்கள் விமானப் படையின் 4 ஆம் இலக்க படையணியால் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டதாகும். ஏனைய 953.43 பறப்பு மணித்தியாலங்கள் 6 ஆம் இலக்க படையணியால் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டது. மிகுதி 399.15 மணித்தியாலங்கள் எம்.ஐ. 17 ரக உலங்குவானூர்தியைக் கொண்டு 9 ஆம் இலக்கப் படையணியால் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டதாகும். VVIP/VIP பயணிகள் போக்குவரத்து, இடர் / தீயணைப்புச் செயற்பாடுகள் Medevac மற்றும் வர்த்தகம் சார்ந்த பறப்புகள் என்பன நடவடிக்கைகளில் அடங்குகின்றன. எம்.ஐ. 17 ரக விமானத்தின் தோற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.



மேலும், இலங்கை விமானப் படையின் 4 ஆம் இலக்கப் படையணியால் பெல் 412 விமானம் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெல் 412 உலங்குவானூர்தியைப் பயன்படுத்தி மொத்தமாக 1,396.20 மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளது. இது எம்.ஐ. 17 விமானத்தின் பறப்பு மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவானதாகும். இத்தகைய விமானங்கள் பெரும்பாலும் VVIP மற்றும் VIP போக்குவரத்து / பயணிகள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதாகும். பெல் 412 விமானத்தின் தோற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.





2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏஎன் 32 பி விமானம் மொத்தமாக 899.42 பறப்பு மணித்தியாலங்கள் இலங்கை விமானப் படையால் இயக்கப்பட்டுள்ளது. மொத்தப் பறப்பு மணித்தியாலங்களும் விமானப் படையின் 2 ம் இலக்கப் படையணி மூலமாகவே கையாளப்பட்டுள்ளன. ஏஎன் 32 பி விமானத்தின் தோற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படையின் விமானத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இன்னுமொரு விமானம் பெல் 206 ஆகும். 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விமானப் படையின் 4 ஆம் இலக்கப் படையணி மற்றும் 7 ஆம் இலக்கப் படையணியால் பெல் 206 ரக விமானம் இயக்கப்பட்டிருந்தது. இதன் மொத்தப் பறப்பு மணித்தியாலமான 723.30 மணித்தியாலத்தில் 211.35 பறப்பு மணித்தியாலம் விமானப் படையின் 4 ஆம் இலக்கப் படையணியாலும் மீதி 511.35 பறப்பு மணித்தியாலம் 7 ஆம் இலக்கப் படையணியாலும் இயக்கப்பட்டிருந்தன. பெல் 206 விமானத்தின் படம் இங்கு தரப்பட்டுள்ளது. மேலும், இலங்கை விமானப் படை வர்த்தக நோக்கங்களுக்காக மொத்தமாக 617.41 பறப்பு மணித்தியாலங்கள் தனது விமானத் தொகுதியினை இயக்கியிருக்கிறது. இந்த பறப்பு மணித்தியாலங்கள் வர்த்தக நோக்கங்களுக்காக எம்ஏ 60 விமானத்தை மட்டுமே பயன்படுத்தி இயக்கப்பட்டதாகும்.



இலங்கை விமானப் படையின் ஒரேயொரு பறப்புப் பகுதியான (விங்) 01 ஆம் இலக்க பறப்புப் பயிற்சி விங் ஆனது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் PT-6 மற்றும் செஸ்னா-150 விமானங்களை இயக்கி இருந்தது. இந்த விமானங்கள் பயிலுநர் பயிற்சி மற்றும் தகைசார் பறப்பு பயிற்றுநர்களின் நோக்கங் களுக்காக இயக்கப்பட்டன. மொத்த மாக 579.55 பறப்பு மணித்தியாலங்கள் இயக்கப்பட்டன. செஸ்னா – 150 விமானத்தின் படம் தரப்பட்டுள்ளது.




2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் PT-06 விமானத்தைப் பயன்படுத்தி மொத்தமாக 468.15 பறப்பு மணித்தி யாலங்கள் இலங்கை விமானப் படை பறந்துள்ளது. PT-06 விமானத் தால் பறக்கப்பட்ட மொத்த 468.15 பறப்பு மணித்தியாலங்கள் முழுவது மாக இலங்கை விமானப் படையின் 01 ஆம் இலக்க பறப்புப் பயிற்சி விங் இனாலேயே பறக்கப்பட்டது. இந்த பறப்பு மணித்தியாலங்கள் சகலதும் பயிற்சி நோக்கங் களுக்காகவே பறக்கப்பட்டதாகும். PT-06 விமானத்தின் தோற்றம் படத்தில் தரப்பட்டுள்ளது. இத்தகைய விமானங்கள் பெரும்பாலும் பயிற்சி நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.





இலங்கை விமானப் படையின் 8 ஆம் இலக்கப் படையணி யானது B – 200 விமானத் துடன் மொத்தம் 303.05 மணித்தியாலங்கள் பறந்துள்ளது. அருகிலுள்ள படம் B-200 விமானத்தின் தோற்றத்தைக் காட்டுகிறது.

இலங்கை விமானப் படையின் இருப்பில் இருக்கும் இன்னொரு விமானம் C- 130 ஆகும். 2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் இலங்கை விமானப் படையானது C-130 ரக விமானங்களைப் பயன் படுத்தி மொத்தமாக 236.55 மணித்தியாலங்கள் பறந்துள்ளது. C-130 ரக விமானத்தின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.



மேலும், இலங்கை விமானப் படை 2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் எம்ஜ – 24, எம்ஜ – 35 விமானங் களைப் பயன்படுத்தி மொத்தமாக 202.02 பறப்பு மணித்தியாலங்கள் பறந்துள்ளது. இந்த மொத்த பறப்பு மணித்தியாலங்களும் இலங்கை விமானப் படையின் 9 ஆம் இலக்க படையணியால் இயக்கப்பட்டதாகும். எம்ஜ-35 ரக விமானத்தின் தோற்றம் அருகில் தரப்பட்டுள்ளது.



2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் இலங்கை விமானப் படையின் 01 ஆம் இலக்க பறப்புப் பயிற்சி விங் இனால் கே-8 விமானத்தைப் பயன்படுத்தி மொத்தமாக 178.36 பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளது. யுத்த நடவடிக்கைகளில் துடிப்புடன் பங்கு கொண்ட கே-8 விமானம் நாட்டில் நிலவும் சமாதான சூழல் காரணமாக முழுவதுமாக பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கே-8 விமானத்தின் தோற்றத்தை உரு காட்டுகிறது.





2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் எவ்-7 விமானத்தைப் பயன்படுத்தி இலங்கை விமானப் படையின் 5 ஆம் இலக்கப் படையணியால் மொத்தமாக 98.38 பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளன. எவ்-7 விமானத்தின் தோற்றம் அருகில் லுள்ளது.

2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் கிபீர் விமானத்தைப் பயன்படுத்தி இலங்கை விமானப் படையின் 10 ஆம் இலக்கப் படையணியால் மொத்தமாக 70.15 பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளன. கிபீர் விமானத்தின் தோற்றத்தை அருகிலுள்ள படம் காட்டுகிறது.




இலங்கை விமானப் படையின் 12 ஆம் இலக்கப் படையணி, 2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் மிக் -27 விமானத்தைப் பயன்படுத்தி மொத்தமாக 57.40 மணித்தியாலங்கள் பறந்துள்ளது. கீழுள்ள படம் மிக் -27 விமானத்தின் தோற்றத்தைக் காட்டுகிறது.



மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மிக் -23, சேர்ச்சர் எம்கே II, செஸ்னா – 421 மற்றும் பிளச் - II UAV ஆகிய விமானங்களைப் பயன்படுத்தி முறையே 38.50, 14.45, 5.50 மற்றும் 0.55 எனும் மொத்த பறப்பு மணித்தியாலங்கள் இலங்கை விமானப் படையால் பரீட்சிப்புப் பறப்பாக பறக்கப்பட்டுள்ளன.

மேலுள்ள விமான நடவடிக்கைக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இடர்மீட்பு நடவடிக்கையினை படம் காட்டுகிறது. இந்த நடவடிக்கை பெல் - 412 விமானத்தைப் பயன்படுத்தி இலங்கை விமானப் படையின் 4 ஆம் இலக்கப் படையணியால் கையாளப்பட்டது.







கீழுள்ள படமானது தரைத் தீயணைப்பு அலகுகளால் அடைய முடியாத (முன்னெடுக்க முடியாத) காட்டுத் தீயினை அணைப்பதற்கு வான் வழி *தீயணைப்பு நடவடிக்கை*யில் ஈடுபட்டுள்ள இவிப விமானம் மற்றும் தீ அணைப்பாளர்களைக் காட்டுகிறது.





அதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கத்தின் எண்ணெய் இட ஆய்வுச் செயற்றிட்டத்திற்கு உதவும் பொருட்டு கரையோரப் பகுதிகளில் வர்த்தகம்சார் உலங்குவானூர்திப் பயணங்களில் ஈடுபட்டுள்ள இவிப இன் பெல் 412 ரக விமானத்தை படம் காட்டுகிறது. இது வட மாகாணத்தின் மன்னார் கடல் வடி நிலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.





## b. வானூர்திசார் பொறியியல் பணிப்பகம்

(1) வானூர்திசார் பொறியியல் பணிப்பகமானது தரமான பொறியியல் பயிற்சிகள் அதேபோன்று பாதுகாப்பான பறப்பினை நிச்சயப்படுத்தல் என்பவற்றின் பிரயோகத்தின் ஊடாக இவிப விமானத் தொகுதி பாதுகாப்பாகப் பறக்கத்தக்க நிலையினை பேணுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இவிப 34 வகைகளில் 129 விமானங்களைத் தனது இருப்பில் கொண்டிருக்கிறது. இந்த 129 விமானங்களும் மேலும் இரு உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 74 நிரந்தர இறக்கை விமானங்கள் மற்றும் 55 உலங்குவானூர்திகள் ஆகும்.

(2) வானூர்திசார் பொறியியல் பணிப்பகமானது 12,886.00 மில்லியன் இலங்கை ரூபா செலவில் விமானக் கொள்வனவு, விமானங்கள் மற்றும் விமானத் தளத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், விமானங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு போன்ற பல்வேறு கொள்பணிகளை முன்னெடுப்பதற்கு 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் முற்கணிப்புச் செய்திருந்தது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட சில செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எனையவை நிதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் பணிப்பகமானது விமானப் பராமரிப்பிற்காக 626.72 மில்லியன் இலங்கை ரூபாயினைச் செலவழித்திருந்தது. இந்தச் செலவு விமான உதிரிப்பாகக் கொள்வனவு, விமானப் பராமரிப்பு, விமானக் கொள்வனவு, விமானக் கருவிகள், விமான எஞ்சின் மற்றும் சுழலிகளின் கொள்வனவுக்கானதாகும். மேலும் 2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் விமானப் பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புக்காக 629.95 மில்லியன் இலங்கை ரூபாயினை இது செலவு செய்திருந்தது. ஆண்டின் காலப் பகுதியில் மிக் - 27 ரக விமானங்கள், எவ் - 7 ரக விமானங்கள், கிபீர் விமானங்கள், கே – 8 ரக விமானங்கள், பெல் ரக உலங்குவானூர்திகள், பீச்கிங் ரக விமானங்கள், வை – 12 விமானங்கள், பிரி – 06 விமானங்கள், எம்ஐ – 17 உலங்குவானூர்திகள், எம்ஐ – 24 உலங்குவானூர்திகள், சி – 130 விமானங்கள், ஏஎன் - 32 பி விமானங்கள் மற்றும் எம்ஏ – 60 விமானங்கள் என்பவற்றுக்கு பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

### (a) 2013 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பிரதான செயற்றிட்டங்கள்

2013 ஆம் ஆண்டு இவிப வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்வுகூறப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டன.

| பணிப்பகத்தின் முக்கியத்துவம் மிக்க நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரூ. மில்.) | நிகர ஒதுக்கீடு (இல.ரூ.மில்.) | உண்மையான செலவு (இல.ரூ.மில் | நடவடிக்கை நிலைமை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| கே- 8 விமானங்கள் மூன்றின் (03) செப்பனிடுகை | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (474.00) | 474.00 | 265.33 | பூர்த்தி | 2013.11.26 அன்று இவிபக்கு O/H விமானம் A/C இன் அனுப்பீடு கிடைத்ததன் பின்பு இந்தத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டது. |
| ஏஎன் - 32பி விமானங்கள் இரண்டின் (02) செப்பனிடுகை | 655.00 | 655.00 | 795.59 | பூர்த்தி | ஒன்றிணைத்தல், விமான முக்கிய பகுதியின் பழுதுபார்ப்பு மற்றும் அதனது ஒருங்கிணைந்த மற்றும் மீள்நிலைப்படுத்தலின் நிறைவின் பின் இந்தத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்கு எம்ஜ – 17 உலங்குவானூர்திகளின் செப்பனிடுகை | 440.00 | 440.00 | 1.01 | பூர்த்தி | 2013 அக்டோபர் 21 அன்று இவிப க்கு கிடைக்கப்பெற்ற O/H இன் பின்பு வியட்நாமின் இரு (02) A/C ஏற்றுக்கொள்ளப்பட்டபோது இந்தத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டது. |
| மூன்று வை – 12 விமானங்களின் செப்பனிடுகை | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (70.50) | | 16.98 | பூர்த்தி | இவிப யில் உள்ள வசதியினைப் பயன்படுத்தி செப்பனிடப்பட்டதுடன் இச்செப்பனிடுகை 2013.01.31 அன்று பூர்த்தியடைந்தது. |
| மூன்று (03) கிபீர் விமானங்களை மீளவும் நன்னிலைப்படுத்தல் | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (51.00) | 51.00 | 50.23 | பூர்த்தி | |
| மிக் - 27 விமானத்தின் மீள் நன்னிலைப்படுத்தல் | 20.00 | 20.00 | 19.93 | பூர்த்தி | |
| இரத்மலானையில் உலங்குவானூர்திகளின் பராமரிப்பகம் தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (18.00) | | | பூர்த்தி | |
| கட்டுநாயக்காவில் துல்லியமான அளவீட்டு உபகரண ஆய்கூடம் மற்றும் நியம அறை என்பன தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (11.00) | 11.00 | 3.25 | | |
| யுத்தப் பாதிப்புகள் மற்றும் விபத்து விசாரணை நிலையம் தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. (1.00) | | | பூர்த்தி | AEW இல் தேவைப்படும் இயலுமைகள் சேர்க்கப்பட்டு வசதிப்படுத்தப்பட்டுள்ளது. |
| AEW இல் Eng R&D அலகு தாபிப்பு | - | | | பூர்த்தி | |
| ஏக்கலவில் பறப்புத் தடப் பயிற்சி நிலையம் தாபிப்பு | 2.00 | | | பூர்த்தி | |
| IT திறன் அபிவிருத்தி நிலையம் ஏக்கலவில் தாபிப்பு | - | | | பூர்த்தி | |
| PT6T-3D எஞ்சின் தாபிக்கப்படும் விசைப்பொறித் தகடு மாற்றுதல் | - | | 0.66 | | |
| வருடத்திற்கு 18 விமான ஓட்டிகளின் பயிற்சிக்காக வழங்குவதற்கு நீடித்திருக்கத்தக்க FTW நடவடிக்கைகள் | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. | | | பூர்த்தி | |
| F-7GS பரீட்சிப்பு உபகரணப் பகுதிக்கான மென்கூடாரத்தின் புனரமைப்பு | கூடுதல் ஏற்பாட்டில் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. | | | பூர்த்தி | |
| AEW இல் எடைப் பரீட்சிப்பு ஆய்கூடத் தாபிப்பு | To be Determined | | | பூர்த்தி | |
| காலாவதியான தகட்டினை மாற்றுவதற்கு பெல் - 212, எம்ஜ – 17 உலங்குவானூர்திகளின் சுழலித் தகடுகள் கொள்வனவு | 229.90 | | 42.62 | | |
| விமான உதிரிப்பாகங்கள் கொள்வனவு | 350.00 | | 284.79 | | |

**அட்டவணை : 6**

(b) **2013 இல் நடைமுறைப்படுத்தப்படாத அல்லது பூர்தித செய்யப்படாத நடவடிக்கைகள்**

இவிப வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்வுகூறப்பட்டு 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படாத அல்லது பூர்த்தி செய்யப்படாத பின்வரும் நடவடிக்கைகளும் குறிப்பு நிரலில் அதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன.

| பணிப்பகத்தின் முக்கியத்துவமிக்க நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரூ.மில்) | உண்மைச் செலவு (இல.ரூ.மில்) | நடவடிக்கை நிலைமை | குறிப்பு |
|---|---|---|---|---|
| EPT -6 விமானத்தைச் செப்பனிடும் இயலுமையைத் தாபித்தல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (650.15) | | BMC இனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | BMC இற்கான அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| C-130 விமானத்தின் PDM சுத்திகரிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (97.65) | 1.42 | | 02 ஆம் இலக்கப் படையணியில் PDM சுத்திகரிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| F-7BS விமானத்தின் ஆயுட்காலம் நீடிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (26.01) | | BMC இனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | BMC இற்கான அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| SUH 540 இன் மீளுருவாக்கம் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (20.00) | .74 | பாதீட்டு வரையறைகள் காரணமாக நடவடிக்கையில் இருக்கிறது. | நிதி கிடைப்பனவின் மீது நடவடிக்கை இருக்கிறது. |
| அநுராதபுரத்தில் UAV அபிவிருத்திச் செயற்றிட்டத் தாபிப்பு (பாதுகாப்பு அமைச்சுச் செயற்றிட்டம்) | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (40.00) | 4.47 | வடிவமைப்பு மற்றும் முறைமைகளின் சோதனை நடவடிக்கை நடைபெறுகிறது. | கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் சூழல் நிலைமைகளின் உச்சளவுப் பயன்பாட்டிற்காக பல்வேறு இடங்களிலிருந்தான செயற்றிட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |
| இரு முழுமையான உபகரணங்கள் இடப்பட்ட NDT ஆய்கூடங்கள் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (50.00) | 3.54 | | தாபிப்பு மற்றும் இயலுமை வேலைகள் நடைபெறுகின்றன. |
| CQAI இன் விரிவாக்கம் | - | | சகல பணிப்பகங்களிலும் நன்கு படித்த மற்றும் DETE அதிகாரிகள் நிரந்தரப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர் | பல்வேறு பணிப்பகங்களுடனுமான ஒருங்கிணைப்பு நடைபெறுகிறது. |
| AEW இல்An-32B மற்றும் C-130 சக்கர அமைப்புத் தளம் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (3.00) | | உட்கட்டமைப்பு தாபிக்கப்பட்டுள்ளது. | சக்கர வருடிக்கான (வீல் ஸ்கேனர்) கேள்வி நடவடிக்கையில் உள்ளது. |
| உலங்கு வானூர்தி இயக்கங்கள் மற்றும் பிஸ்ரன் என்ஜின் சோதனைக்கு உதவுவதற்கு ASW இன் மேம்பாடு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (13.00) | 1.86 | | வேலையை வெளிநகர்த்தும் அலகுடன் புதிய கொட்டகைக்கு இயலுமைகளை மாற்றுதல் நடைபெறுகிறது. |
| BMC இன் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (1,500.00) | | | அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| ரஷ்ய உலங்கு வானூர்தி பழுது பார்ப்பு மற்றும் செப்பனிடல் வசதி தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (2,600.60) | | ஆரம்ப கள ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. | விபரமான முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழிற்றகைமை சார்ந்த பயிற்சி நிலையம் சீனக்குடாவில் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (15.00) | | படைப்பிரிவுப் பொறுப்பாளருக்கு ஆரம்ப அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | விமானப் படைத் தலைமையகத்தின் அங்கீகாரத்தின் மீது CO FTW/CO GTW இனால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. |
| PAE இல் நான்கு (04) WP-13F என்ஜின்கள் செப்பனிடல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (160.00) | | | 02 என்ஜின்கள் பெறப்பட்டு DPC இல் மதிப்பீடு நடைபெறுகிறது. |
| கொட்டகைக்கான C-130 விமான PDM சுத்திகரிப்பு (உள்நாட்டு) | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (25.00) | | DCE/AHQ/12/PUB/ B&CE/1118 இனால் களத் திட்டமிடல் மற்றும் கேள்வி கோரல் நடைபெறுகின்றன. | லாஜ் என்ஜினியரிங் உடன்படிக்கை கைச்சாத்திட பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| மிக் 27 சோதனை பஸ் பழுதுபார்ப்பும் அளவுதிருத்தலும் | - | | உள்ளூரிலேயே நிறைவேற்றப்பட்டது. | ரஷ்ய உலங்குவானூர்தி செப்பனிடல் தொழிற்சாலை யின் தாபிப்புடன் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியக்கூறு ஆராயப்படுகிறது. |
| கே 8 விமான சோதனை பஸ் இன் பழுதுபார்ப்பும் அளவுதிருத்தலும் | - | | BMC இன் பகுதியாக நிறைவேற்றப்படும். | BMC இற்கான அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| பெல் 212 சேர்வோ அக்சுயேற்றர் இன் செப்பனிடுகை | - | | | |
| Huosai 6A என்ஜின்களை உள்நாட்டில் செப்பனிடுதல் | - | | | |
| HMI கொள்ளளவுடைய அலிசன் C20B என்ஜின் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| AEW இல் ஒன்றிணைப்பு / தேனடை பனல் உருவாக்கும் நிலையம் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (3.00) | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| விசேடமான பாகங்கள் செப்பனிடும் நிலையம் AEW இல் தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (4.00) | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| இரண்டு(02) C-130 வலவன் இருக்கைப் பகுதியை நவீனப்படுத்தல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (6,501.50) | | பாதீட்டு வரையறைகள் காரணமாக நடவடிக்கையில் இருக்கிறது. | நிதி கிடைப்பனவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் |
| ஒரு (01) Mi-17 உலங்குவானூர்தியை ஒரு (01) நோயாளர் காவு வண்டியாக மாற்றியமைத்தல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (26.00) | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| ஒரு வான் - கடல் உலங்குவானூர்தியாக MI-17 ரக உலங்குவானூர்தி ஒன்றை ஒழுங்கமைத்தல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| இவிப கட்டுநாயக்காவில் ஒரு(01) தாக்குதல் விமானப் படையணி தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | LLTL இனூடான முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது | |
| இரண்டு(02) பெல் 412 உலங்குவானூர்திகளின் வலவன் இருக்கை பகுதியை நவீனப்படுத்தல் | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | பாதீட்டு வரையறைகள் காரணமாக நடவடிக்கையில் இருக்கிறது. | நிதி கிடைப்பனவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| கே 8 ஒப்புமைப்போலி (மொடல்) வசதி தாபிப்பு | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (96.50) | | | சாத்தியக்கூற்று ஆய்வு |
| 2 PT-6, 3 K-8. 2 206 பணிப்பயிற்சி | 430.10 | | TEC இற்கான அங்கீகாரம் எதிர் பார்க்கப்படும் அதே வேளை ஏற்றுக் கொள் தன்மை காலாவதியாகியுள்ளது | LLTL இனூடாக புதிய முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது |
| 6 JF 17 பணிப்பயிற்சி | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | LLTL இனூடாக முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது | |
| நீண்ட வீச்செல்லை கொண்ட UAV பணிப்பயிற்சி | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | LLTL இனூடாக முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது | |
| இரண்டு (02) Y-12 பணிப்பயிற்சி | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (222.30) | | TEC இற்கான அங்கீகாரம் எதிர் பார்க்கப்படும் அதே வேளை ஏற்றுக் கொள் தன்மை காலாவதியாகியுள்ளது | LLTL இனூடாக புதிய முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது |
| 3 K-8 விமான பணிப்பயிற்சி | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (403.60) | | TEC இற்கான அங்கீகாரம் எதிர் பார்க்கப்படும் அதே வேளை ஏற்றுக் கொள் தன்மை காலாவதியாகியுள்ளது | LLTL இனூடாக புதிய முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது |
| 2+2 PT-6 (2 PT-6 C/F -2012 இலிருந்து) பணிப்பயிற்சி | 53.00 | | TEC இற்கான அங்கீகாரம் எதிர் பார்க்கப்படும் அதே வேளை ஏற்றுக் கொள் தன்மை காலாவதியாகியுள்ளது | LLTL இனூடாக புதிய முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது |
| 3 206 நீண்ட வீச்செல்லை கொண்ட பணிப்பயிற்சி | கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது | | வழங்கப்பட்ட உலங் குவானூர்தியின் மதிப்பீடு பூர்த்தி அடைந்துள்ளது | விற்பனைக்காக உலங்குவானூர்தியின் கிடைப்பனவுக்கான தெளிவாக்கல் பெறப்பட்டிருக்கிறது. |
| நுணுக்கக் கண்காணிப்பு உபகரணத்துடன் 2 B 20 பணிப்பயிற்சி | கணிப்பு நடைபெறுகிறது | | பாதீட்டு வரையறைகள் காரணமாக நடவடிக்கையில் இருக்கிறது. | நிதி கிடைப்பனிவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் |
| VVIP இற்கான பிராந்திய TPT விமானப் பணிப் பயிற்சி | கணிப்பு நடைபெறுகிறது | | பாதீட்டு வரையறைகள் காரணமாக நடவடிக்கையில் இருக்கிறது. | நிதி கிடைப்பனிவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் |
| இரண்டு (02) PT-6 விமானங்களின் பணிப்பயிற்சி | கணிப்பு நடைபெறுகிறது | | TEC இற்கான அங்கீகாரம் எதிர் பார்க்கப்படும் அதே வேளை ஏற்றுக் கொள் தன்மை காலாவதியாகியுள்ளது | LLTL இனூடாக புதிய முன்வரைபு எதிர்பார்க்கப்படுகிறது |

**அட்டவணை: 7**

(c) **விமானம் மற்றும் விமானத்தளம் தொடர்புபட்ட நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 2013**


i. **இவிப இன் 112 ஆம் இலக்கப் படையணி**

**BH II UAV இற்கான என்ஜின் பொருத்துச் சட்டகங்களின் உள்ளூர்த் தயாரிப்பு**



இந்த என்ஜின் பொருத்துச் சட்டகமானது மூல உபகரணத் தயாரிப்பு உதிரிப்பாகங்களின் கிடைப்பனவு இன்மை காரணமாக அந்த மூல உபகரண தயாரிப்புப் (OEM) பகுதிக்கு ஒரு மாற்றீடாக வரையறுக்கப்பட்ட விஸ்கம் பிரதர்ஸ் இன் ஊடாக தயாரிக்கப்பட்டதாகும். இந்தப் பொருளானது வான்வெளிச் சோதனைக்காக STR 209 இற்கு அடிப்பாகத் தடத்தின் மீது பொருத்தப்பட்டு பரிசோதிக்கப் பட்டது.

**BH II UAV இற்கான மாற்று பொருத்துச் சட்டகங்களின் உள்ளூர்த் தயாரிப்பு**



இந்த மாற்று பொருத்துச் சட்டகம், மூல உபகரணத் தயாரிப்பு உதிரிப் பாகங்களின் கிடைப்பனவு இன்மை காரணமாக அந்த மூல உபகரணத் தயாரிப்புப் பகுதிக்கு ஒரு மாற்றீடாக, வரையறுக்கப்பட்ட விஸ்கம் பிரதர்ஸ் இன் ஊடாக தயாரிக்கப்பட்டதாகும். இந்தப் பொருளானது வான்வெளிச் சோதனைக்காக STR 209 இற்கு அடிப்பாகத் தடத்தின் மீது பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

சகல நான்கு புளு ஹொறிஸோன் (Blue Horizon) II UAV களையும் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செப்பனிட எதிர்பார்க்கப்பட்டது மூல உபகரணத் தயாரிப்பாளர்களின் பிரதிபலிப்பு இன்மை காரணமாக, படையணியானது உள்ளூரிலேயே ஒரு காலப்பகுதியினுள் பரீட்சிப்புகளை செய்யவதற்கு ஆரம்பித்தது. இதற்காக சகல தரங்களையும் கொண்ட முந்தைய நடவடிக்கை சார்ந்த அனுபவங்கள், கிடைக்கக்கூடிய கைந்நூல்கள் மற்றும் வழிகாட்டல்களைப் பயன்படுத்தி ஆழமான வேலைத்தாள்களைத் தயாரித்திருந்தது. இவிப இன் வானூர்திசார் பொறியியல் பணிப்பாளர் மற்றும் தரக் காப்பீட்டுக் கட்டளை அதிகாரி ஆகிய இருவரிடமிருந்தும் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் சகல விமானங்களுக் குமான பரீட்சிப்புகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. STR-212 ஆனது பரிசீலனை செய்யப்படும் இறுதி விமானமான இருந்ததுடன் அது தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



**ii. இவிப இன் 08 ஆம் இலக்கப் படையணி**

**இவிப இன் 112 ஆம் இலக்கப் படையணியின் Y-12 II விமானத்தின் ஆயுட்காலத்தை நீடித்தல்**

இவிப விமானப் பொறியியல் பகுதி கட்டுநாயக் காவில் வரையறுக்கப் பட்ட CATIC சைனா நிறுவனத்தின் மேற்பார்வை யின் கீழ் SCL 857, SCL 858, மற்றும் SCL 859 Y-12II விமானத்தின் ஆயுட்காலத்தின் நீடிப்புக்கான சீராக்கல் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டது. இந்தச் செயன்முறையில் இவிப ஆளணியினர் செப்பனிடலில் தேவையான பங்கினை ஆற்றியதன் மீது வரையறுக்கப்பட்ட CATIC சைனா நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டனர்.



**Y-12 II இன் உட்புற மேலுறைகளை உள்ளூரில் தயாரித்தல்**



SCL 857, SCL 858, SCL 859 Y-12II விமானத்திற்கு விமான உட்புற மேலுறைகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக இவிப ஒரு சிறு தொகைச் செலவில் உலங்குவானூர்திப் பயண இயக்கங்களுக்காக ஒரு முழுமையான இளமைத் தோற்றத்தை வழங்குவதற்கு இயலுமாகவிருந்தது. இதற்கு வெளிநாடுகளில் இருந்து பெறுகை பெறப்பட்டிருப்பின் அது அண்ணளவாக 2.30 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவுடையதாக இருந்திருக்கும்.

**Y-12 II விமான, பயணிகள் இருக்கைப் பகுதியில் மின்விசிறிகள் பொருத்துதல்**



உள்ளூரில் கிடைக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்தி பயணிகளின் சௌகரியத்தை மேம்படுத்துவதற்கு SCL 857, SCL 858, SCL 859 Y-12II விமானத்தின் பயணிகள் பகுதியில் மின்விசிறிகள் பொருத்தப்பட்ட்டன.

**B200 விமானத்திற்கு ஸ்றோவ் விளக்கு பொருத்தப்பட்டு நவீனப்படுத்தல் முன்னெடுப்பு**



SMR 843 மற்றும் SMR 2311 B200 விமானத்திற்கு நவீன ஸ்றோவ் விளக்குகள் பொருத்தப்பட்டு வெளிநாட்டுக் கொள்வனவு தடுக்கப்பட்டது. இதனால் பொதுப் பணமும் நேரமும் மிச்சப்படுத்தப்பட்டன.

**சகல Y-12 II மற்றும் Y-12 IV விமானங்களுக்காகவும் இருக்கை மேலுறைகள் மற்றும் தரை விரிப்புகள் தைத்தல்**




தரத்தினை மேம் படுத்துவதற்காக SCL 857, SCL 858, SCL 859, SCL 3124, SCL 3125 விமானங்களுக்கு புதிய இருக்கை மேலுறைகள் மற்றும் தரை விரிப்புகள் என்பன தைக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டன.

**இரவு நேர புளோரொளிர்வு டோச்சுகள் (torches) தயாரிப்பு**



3 தொகுதிகள் இரவு நேர புளோரொளிர்வு டோச்சுகள் உள் ளுரில் தயாரிக்கப் பட்டுள்ளன.

**iii. இவிப இன் 111 ஆம் இலக்கப் படையணி**



OEM இடமிருந்தான SRMKII UAV இன் மூல காற்று வடிகட்டிகள் காலாவதியாகி யுள்ளதுடன் அதனைக் கொள்வனவு செய்வதில் இவிப நெருக்கடியை எதிரிநோக்கி யிருந்தது. எனவே, படையணி யால் உள்ளூரிலேயே ஒரு காற்று வடிகட்டி வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டதுடன் இது படையணியால் UAV இல் தற்போது பயன்பாட்டில் உள்ளது. மூல காற்று வடிகட்டியின் விலை 481.50 அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும் உள்ளூர் தயாரிப்பு காரணமாக (வளாகத்தினுள்) 481.50 அமெரிக்க டொலர்கள் செலவினை இவிப சேமித்திருக்கிறது.

SRMKII UAV இல் பொருத்தப் படும் வெப்ப பற்றரியின் ஆயுட் காலம் காலாவதி யாகியுள்ளதுடன் தற்போது ஆயுட்கால நீடிப்பில் உள்ளது. மூல உபகரண தயாரிப்பில் இருந்து புதிய பற்றரிகளை கொள்வனவு



செய்வதற்கான செலவு அதிகமாக இருப்பதன் காரணமாக, படையணி ஒரு கலத்தை மாற்றுவதற்கு பிரேரித்துள்ளதுடன் அது தற்போது நடவடிக்கையில் உள்ளது. பொருத்து பற்றரியின் 2 அலகுகளின் மூல கொள்வனவு விலை 2.60 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். பொருத்து பற்றரியின் 2 அலகுகளின் உள்ளூர் தயாரிப்புச் செலவு 0.11 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். உண்மையில் செயற்றிட்டத்தின் ஊடாக 2.49 மில்லியன் இலங்கை ரூபாய்கள் சேமிக்கப் பட்டிருக்கின்றன.

மேலும், வெளிவாரி வலவர்கள் பயிற்சித் தேவைக்குப் பரிமாறுவதன் பொருட்டு, படையணியால் மாதிரி விமானத் தயாரிப்புச் செயற்றிட்டம் பொறுப்பேற்கப்பட்டது. தற்போது, செயற்றிட்டத்தால் தயாரிக்கப்பட்ட 05 மாதிரி விமானங்கள் படையணியில் இருக்கின்றன.

**iv. விமானப் பொறியியற் பகுதி**

பெல் 412 EP உலங்குவானூர் திக்குப் பொருத்தப்பட்டி ருந்த PT6T-3D மாற்றீட்டு CT வட்டானது விமானப் பொறியியல் விங் என்ஜின் பகுதியில் முதன்



முறையாக இயங்கியது. இரண்டு (02) PT6T-3D வலுப் பகுதி களில் CT வட்டின் மாற்றீடானது ஏற்கனவே வானூர்திப் பொறியியல் விங் இன் என்ஜின் பகுதியில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருப்பதுடன் தற்போது அவை செயற்பாட்டிலும் உள்ளன. சகல எஞ்ஜின் பகுதி தொழினுட்பவியலாளர் களுக்கும் பயிற்சி அளித்ததால் ஒவ்வொரு வலுப் பகுதியிலும் செலவுச் சேமிப்பு 30,000 அமெரிக்க டொலர் என முற்கணிப்புச் செய்யப்பட்டதுடன் புதிய வகையிலான திறன்

பாடத்திட்டமானது தற்போதைய என்ஜின் பகுதியின் இயலுமையை உயர்த்துவதற்கு தரக் காப்பீட்டுக் கட்டளை உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டது.

c. **பொதுப் பொறியியல் பணிப்பகம்**

(1) பொதுப் பொறியியல் பணிப்பகமானது இவிப இன் பொதுப் பொறியியல் தரத்தினரை நிர்வகிப்பதற்காகத் தாபிக்கப்பட்டிருக்கிறது. இவிப இன் பிரதான வகிபாகமான பறத்தலுக்கு ஆதரவு வசதிகளை வழங்குவதே இதன் பிரதான பணியாகும். இந்தப் பணிப்பக நிர்வாகச் செயல் எல்லையின் கீழ் 10 தரத்தினர்களும் 2 முக்கிய அமைப்புகளும் வருகின்றன.

(2) பொதுப் பொறியியல் பகுதி (GEW) மற்றும் பொறிசார் போக்குவரத்தும் செப்பனிடல் பகுதியும் (MTR&OW) ஆகிய இரண்டுமே அந்த இரு அமைப்புகளும் ஆகும். பணிப்பகமானது 10 தரங்களில், நிபுணத்துவம் மிக்க விமானப் படை வீரர்களைக் கொண்டுள்ளது. ஆனால் இவர்கள், பொதுப் பொறியியல் கடமைகள் மற்றும் வானூர்திசார் பொறியியலின் களக் கடமைகளுக்கு இடையில் மாற்றத்தக்க தொழினுட்ப பொறியியல் கிளையின் உத்தியோகத்தர்கள் மூலம் சேவையாற்றுகிறார்கள்.

(3) பணிப்பகமானது பொதுப் பொறியியல் நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 702.30 மில்லியன் இலங்கை ரூபாய்கள் தொகையினை எறிவுசெய்திருந்தது. பணிப்பகமானது 320.50 மில்லியன் இலங்கை ரூபாய்களிலான பாதீட்டுடனும் 381.80 மில்லியன் இலங்கை ரூபாய்களிலான கூடுதல் ஏற்பாட்டினைப் பெறும் எதிர்பார்ப்புடனும் அதனது பாதீட்டைத் தயாரித்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் மூலதன உபகரணத்தின் கொள்வனவுக்கு 4.99 மில்லியன் இலங்கை ரூபாய்களை பணிப்பகம் செலவிட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிட்டு நோக்கிய பணிப்பக நடவடிக்கைகள் பின்வருமாறு :

| **நடவடிக்கை** | **பாதீட்டு ஒதுக்கீடு -2013 (இல.ரூ.மில்.)** | **உண்மையான செலவு (இல.ரூ.மில்.)** | **குறிப்புகள்** |
|---|---|---|---|
| L-70 AD துப்பாக்கிகளுக்கான உதிரிப்பாகக் கொள்வனவும் முன்தள்ளக்கூடிய இருக்கையின் திருத்தமும் சுத்திகரிப்பும் | 10 | - | இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடான தெளிவுபடுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| F-7GS, கிபீர் பயிற்சியாளர் விமானம் என்பவற்றின் முன்தள்ளக்கூடிய இருக்கையின் பழுதுபார்ப்பும் செப்பனிடுகையும் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (13.15) | - | F-7GS இன் முன்தள்ளக்கூடிய இருக்கையின் செப்பனிடுகையானது உள்ளக வசதிகளைக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. கிபீர் பயிற்சியாளர் விமானத்திற்கான செப்பனிடல் செய்யப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| PL-5E ஏவுகணையின் கொள்வனவும் மீள் உறுதிப்படுத்தலும் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (84.49) | - | சாத்தியவள ஆய்வு நடைபெறுகிறது. |
| கிபீர் மற்றும் F-GS விமான 4 ஆம் இலக்க எரிபொருள் பைலோனின் உதிரிப்பாகங்கள் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (0.50) | - | திகதிக்கு விலைமனுக் கோரல் இல்லை. 04 ஆம் இலக்க எரிபொருள் பைலோனுக்காக விலைமனு கோரப்படவில்லை. |
| சுடுதல் போட்டிக்கான துப்பாக்கிகள் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (9.80) | - | சுடுதல் போட்டித் தலைவர்களால் இரத்துச் செய்யப்பட்டது |
| முன்தள்ளுகை இருக்கை காட்றிச்சு களும் பைரோ காட்றிச்சுகளும் கொள்வனவு | 10 | 1.7 | பைரோ காட்றிச்சுகள் ஒப்படைக்கப்பட்டன. முன்தள்ளுகை காட்றிச்சு களின் கொள்வனவு நடவடிக்கையில் உள்ளது |
| கிபீர் பயிற்சியாளர் விமானத்தின் முன்தள்ளுகை இருக்கைக்கான உதிரிப்பாகங்களின் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (24.29) | 3.4 | உதிரிப்பாகங்கள் 2014 மே இல் ஒப்படைக்கப்பட வேண்டும். |
| பொதுப் பொறியியல் இயந்திரம்/AD துப்பாக்கிகள் கொள்வனவு | 10 | 1.9 | GEW கட்டுநாயக்கா விற்காக AD துப்பாக்கிகள் பழுதுபார்க்கப்பட்டன. |
| சீனாவிலிருந்து தரைப் படைக் கலங்களின் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (50.00) | - | பாதீட்டுப் பிரச்சினை காரணமாக ஒப்படைப்பு காக்கவைக்கப்படுகிறது. |
| சுடுநர் போட்டிக்கான துணைப் படைக் கலங்கள் மற்றும் மீள்நிரப்புப் பாகங்கள் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது (15.00) | - | சுடுதல் போட்டித் தலைவர்களால் இரத்துச் செய்யப்பட்டது |

**அட்டவணை: 8**

## d. இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகம்

இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகமானது இலத்திரனியல், தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் செயற்பாடுகள் போன்றவற்றின் நிருவாகத்திற்காகவும் வினைத்திறனான இலத்திரனியல், தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் வசதிகளை வழங்குவதற்கும் பராமரிப்பதற்காகவும் என இவிப இல் தாபிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இலத்திரனியல், தொலைத்தொடர்புகள் பொறியியல் பணிப்பகத்தின் ஒட்டுமொத்தப் பாதீடு 6728.05 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இந்த ஒட்டுமொத்தப் பாதீடும், பாதீட்டு ஒதுக்கீடான 366.50 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் ஏற்பாடுகள் தொகையான 6361.55 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் உள்ளடக்கிய தொகையானது ஆண்டிற்காக முன்மொழியப்பட்ட இலக்குகளை நிறைவுசெய்வதற்காக பணிப்பகத்திற்கு எறிவு செய்யப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டில் பணிப்பகமானது வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்வுகூறப்பட்ட பல செயற்றிட்டங்களை பிரமிக்கத்தக்க வகையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி இருந்தது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மேலும் சில செயற்றிட்டங்கள்கூட இந்த ஆண்டின் காலப்பகுதியில் பணிப்பகத்தினால் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. அதற்கு அப்பாலும், சிறு தொகையான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவை ஆண்டின் இறுதியில் இன்னும் முற்றுப்பெறாத அதே வேளை மிகச் சொற்பளவான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவும் இல்லை. அதன் விபரங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

### (1) 2013 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

இலத்திரனியல், தொலைத்தொடர்புகள் பொறியியல் பணிப்பகத்தால் பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப் பட்டிருந்தன.

#### (a) இரத்மலானை இவிப தளத்தில் சுயாதீன தகவல் தொழினுட்பவியல் அமைப்பினைத் தாபித்தல்




2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது 3.62 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் இரத்மலானை இவிப தளத்தில் சுயாதீன தகவல் தொழினுட்பவியல் அமைப்பினைத் தாபித்திருக்கிறது. இரத்மலானை இவிப தளத்தில் சுயாதீன தகவல் தொழினுட்பவியல் அமைப்பினைத் தாபிப்பதன் நோக்கம், விமானப் படையினுள் தகவல் தொழினுட்பவியலின் ஒவ்வொரு நடவடிக்கையினையும் பொறுப்பேற்பதற்காகும்.

**(b) கட்டுநாயக்கா இவிப தளத்தில் இலத்திரனியல், தொலைத் தொடர்புகள் பொறியியற் பகுதியில் பறப்பு மின்னணுவியல் வேலைப் பட்டறைகளை நவீனப்படுத்தல்**

மேலும், சிவில் விமானத்தள அதிகாரசபை (CAA) தரங்களுக்கு



இணையாக கட்டுநாயக்கா இலத்திரனியல், தொலைத் தொடர்புகள் பொறியியற் பகுதியில் பறப்பு மின்னணு வியல் வேலைப் பட்டறை களை இவிப நவீனப்படுத்தி யிருக்கிறது. இற்காக 8.51 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவிடப்பட்டி ருக்கின்றன. தகவலினை படம் தருகிறது.

மேலும், இலத்திரனியல், தொலைத்தொடர்பு நடவடிக்கைகளின் அபிவிருத்தியின் மீது இலத்திரனியல், தொலைத்தொடர்புகள் பொறியியற் பகுதியில் உள்ள தகவல் தொழி னுட்பவியல் ஆய்கூடங் களுக்கு தகவல் தொழினுட்பவியல் உப கரணப் பொருத்தலுக் காக 19.32 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.



பொருத்தப்பட்ட தகவல் தொழினுட்பவியல் உபகரணங்களின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(c) சுதேச UAV முறைமையின் அபிவிருத்தி**

மேலும், UAV அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்காக பாகங்களின் கொள்வனவுக்கு 4.56 மில்லியன் இலங்கை ரூபாய்களை இவிப செலவு செய்திருந்தது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 12.78 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் சுதேச UAV முறைமை அபிவிருத்தியில் இவிப ஈடுபாடு காட்டியிருந்தது. இது 2013 ஆம் ஆண்டின் இறுதியிலும் நடைபெற்றுக்கொண்டிரு ந்தது. விமானப் படை யால் அபிவிருத்தி



செய்யப்பட்ட இரண்டு UAV விமானங்களின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(d) இரண்டு MI – 17 உலங்குவானூர்திகளுக்கு ANVIS/HUD பொருத்துதல்**

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இன்னுமொரு முக்கிய நடவடிக்கை, இரண்டு எம்ஐ – 17 உலங்கு வானூர்திகளுக்கான ANVIS/HUD இன் பொருத்தல் ஆகும். இது எம்ஐ – 17 உலங்குவானூர்திகள் இரவு நேர பறப்பில் ஈடுபடும் வல்லமையினைச் சிறப்பாகக் கிடைக்கச் செய்துள்ளது. இச்செயற்றிட் டத்தின் நிதிசார் பெறுமதி 43.94 மில்லியன் இலங்கை ரூபாய் களாகும். இந்தச் செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலும் நடவடிக்கையில் இருந்தது.

**(e) பீதுருதாலகால மலைக்கான ஒரு தரவிறக்கத் தொடர்பு அமைப்பைப் பொருத்துதல்**

மேலும், 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கண்காணிப்புக் கட்டணச் செலுத்துகையிலிருந்து (payloads) உடனுக்குடனான தரவுகளின் தரவிறக்கத்தை இயலச் செய்வதற்கு பீதுருதாலகால மலைக்கான ஒரு தரவிறக்க அமைப்பைப் பொருத்துவதற்கு இன்னுமொரு 75.00 மில்லியன் இலங்கை ரூபாய்களை இவிப செலவிட்டிருந்தது. இச்செயற்றிட்டமானது 2013 ஆம் ஆண்டின் இறுதியில் தொடர்ந்தும் நடவடிக்கையில் இருந்தது.

**(f) பறப்பு மின்னணுவியல் உபகரண துணைப் பொருட்களின் கொள்வனவு**

இவிப 57.37 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் நடவடிக்கையினைச் சிறப்பானதாக்கும் பொருட்டு விமானத்திற்குத் தேவையான பறப்பு மின்னணுவியல் உபகரணத் துணைப் பொருட்களை



கொள்வனவு செய்யவென 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்மொழிந் திருந்தது. இந்தச் செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நடவடிக்கையில் இருந்த B-200 பீச்கிராப்ட் இற்கான கண்காணிப்பு payload இன் பொருத்தல் ஆனது இன்னுமொரு முக்கிய கொள்பணியாகும். இந்தச் செயற்றிட்டத்திற்காக இவிப 202.00 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டிருந்தது.

**(g) கட்டுநாயக்கா ராடர் பராமரிப்புப் பகுதியில் கடை மட்டம் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு வசதிகளைத் தாபித்தல்**



மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக ராடர் முறைமைகள் மற்றும் சமகால உபகர ணங்களுக்கான கருவிகளுக்குத் தேவைப்பட்டவற் றுடன் ராடர் பராமரிப்புப் பகுதி யில் கடை மட்டம் பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு வசதிகளின் தாபிப்பு என்பனகூட 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான செலவு 53.50 மில்லியன் இலங்கை ரூபாய்களாக அமைந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் இது நடவடிக்கையில் இருந்தது.



வசதியளிக்கப்பட்ட ராடர் பராமரிப்பு வல்லமைகளுடன் கட்டுநாயக்கா இவிப தள ராடர் பராமரிப்புப் பகுதியின் மீள்நிலை நிறுத்தப்பட்ட இடத்தின் தோற்றத்தை படம் காட்டுகிறது.



2013 ஆம் ஆண்டு நடவடிக்கைத் திட்டத்தில் எறிவுசெய்யப்பட்டிராத சில நடவடிக்கைகளில் இவிப ஆர்வம் காட்டியிருந்தது. சில முக்கிய நடவடிக்கைகளைப் படத்தில் காணலாம்.



இவிப ஆனது ஒரு 25 மீற்றர் அன்ரெனாக் கம்பத்தினை மீரிகம இவிப நிலையத்திலும் ஒரு 15 மீற்றர் அன்ரெனாக் கம்பத்தினை சீனக்குடா இவிப அக்கடமியிலும் நாட்டியிருந்தது. அருகில் இருப்பது மீரிகம இவிப நிலையத்தில் நாட்டப்பட்ட 25 மீற்றர் அன்ரெனாக் கம்பமாகும்.

இந்தப் படம் சீனக்குடா இவிப அக்கடமியில் நாட்டப் பட்ட அன்ரெனாக் கம்பத்தின் நொடிப்பெடுப்பு நிழற்படம் ஆகும்.



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது 139 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில், இந்திரா எம்கே–II எனும் ராடர் களுக்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்திருந்தது.

மேலும், இவிப ஆனது எம்ஐ–17 ரக உலங்குவானூர்திக்கான சோதனை உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவைக் கொண்டிருந்த சில பறப்பு மின்னணுவியலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டியிருந்தது. இதற்கான செலவு முறையே 50 மில்லியன் இலங்கை ரூபாய்களும் 240.00 மில்லியன் இலங்கை ரூபாய்களும் ஆகும்.

அதற்கு மேலாக, இவிப ஆனது, இவிப இனுள் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகள் நடவடிக்கைகளை செம்மைப்படுத்து வதற்கு சில முக்கிய பல்வகைக் கூட்டான செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முற்றாக்கப்பட்டிருந்த செயற்றிட்டங்கள் பின்வருமாறு,

**(h). ஏக்கல இவிப தரப் பயிற்சிப் பாடசாலையில் நவீன இலத்திரனியல் ஆய்கூடக் கட்டடத்தொகுதியின் தாபிப்பு**




அடிப்படை, உயர்தரப் பயிற்சிக்காக ஏக்கல இவிப தரப் பயிற்சிப் பாடசாலையில் நவீன இலத்திரனியல் ஆய்கூடக் கட்டடத் தொகுதி தாபிக் கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமகால இலத்திரனியற் சூழலில் கலை உபகரணங்களின் நிலையில் பயிற்சியாளர் கள் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதனைத் தொடர்ந்து தர ஆளணியினரின் அறிவு அடிப்படையிலான அபிவிருத்தியின் ஊடாக விமானப் படை இலத்திர னியல் உபகரணங்களின் உள்ளகப் பராமரிப்புக்காக இத்தகைய வசதிகள் செய்யப்படுதல் வேண்டும். செயற்றிட்டத்தின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(j). இலத்திரனியற் பகுதிகளின் தாபிப்பு**

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப தனது செயல்லெல்லைப் பரப்பின் கீழுள்ள பிரதேசங்களுக்கான உட்கட்ட மைப்புகளை செம்மைப்படுத்தல் / தாபித்தலில் மிகப் பெரிய வெற்றி யினை ஈட்டியு ள்ளது. இந்த வகை யில் சிகிரிய ா, வீரவி ல மற்றும் வன்னி யிலுள் ள ரெஜிமென்ட் பயிற்சிப் பாடசாலை போன்ற இவிப நிலையங்களில் இலத்திரனியல் பகுதிகளை இவிப தாபித்துள்ளது.



சிகிரியா இவிப நிலையத்தில் இலத்திரனியல் பகுதியின் கட்டுமானம்
வன்னி இவிப ரெஜிமென்ட் பயிற்சிப் பாடசாலையில் இலத்திரனியல் பகுதிகளின் கட்டுமானம்



வீரவில இவிப நிலையத்தில் இலத்திரனியல் பகுதியின் கட்டுமானம்




மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது, இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகள் உபகரணங்கள் தொடர்பிலான முக்கிய பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்பினை முறையே 41.60 மில்லியன் இலங்கை ரூபாய்கள், 51.63 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் செய்திருக்கிறது.

## (2) 2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படாத நடவடிக்கைகள்

பின்வரும் நடவடிக்கைகள், இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகள் பொறியியல் பணிப்பகத்தின் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்ததுடன் பல்வேறு காரணங்களால் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்படாதவை ஆகும். வருடத்தின் காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்படாத முக்கிய நடவடிக்கைகள் சில கீழே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

| பணிப்பகத்தின் முக்கிய நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரு.மில்.) | நடவடிக்கையின் நிலை | குறிப்பு |
|---|---|---|---|
| மூன்று (03) பெல் 412 உலங்குவானூர்தி மீதான NVG மேம்படுத்தல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 150.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| ஆறு (06) எம்ஐ 17 உலங்குவானூர்தி மீதான NVG மேம்படுத்தல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 30.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| ஒரு (01) எம்ஐ 17 உலங்குவானூர்தியை ஒரு வான்/ கடல் இடர்மீட்பு உலங்குவானூர்தியாக மாற்றஞ் செய்வதற்கான கண்காணிப்பு Payload பொருத்துதல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 202.00 | | பாதீட்டு வரையறை காரணமாக |
| நடவடிக்கை, வல்லமை பொருந்தியதாக இருப்பதற்கு விமானத்திற்குத் தேவையான பறப்பு மின்னணுவியல் உபகரணம் மற்றும் பயன்படுத்தப்படும் பொருட்கள் கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 170.30 | நடவடிக்கையில் உள்ளது | பாதீட்டு வரையறை காரணமாக |
| பீச்கிராப்ட் (Beechcraft) இற்கான கடல் நுணுக்கக் கண்காணிப்புக் கருவி பொருத்துதல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 500.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| B-20 பீச்கிராப்ட் (நடவடிக்கைகள் பணிப்பகத்தால் புதிதாகப் பிரேரிக்கப்பட்டது) இற்கான ஒரு (01) கண்காணிப்பு Payload பொருத்துதல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 202.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| ஒரு (01) B-20 பீச்கிராப்ட் இற்கான ஒரு விண்ணில் பாயும் உபகரணத்தின் பொருத்துகை | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 570.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| அகன்ற பரப்பு வருடிகள் மற்றும் திசை காட்டிகளின் (DF) கொள்வனவு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 100.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| SUH-540 Bell 212 உலங்குவானூர்தியின் முன்னிலை மீட்டாக்கம் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 80.00 | ஆரம்பிக்கப் படவில்லை | |
| புதிய இவிப விமான நிலையங்களுக்குத் தேவையான தரை வழி வழிகாட்டு உதவிகள் மற்றும் பயணிகள் முனையங்களின் தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 622.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| AD இயக்கங்களுக்கான தகவல் பரிமாற்ற வசதிகளை ஏற்பாடு செய்தல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 49.01 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| ராடர் முறைமைகள் மற்றும் சமகால உபகரணங்களுக்காகத் தேவைப்படும் சோதனைக் கருவிகளுடன் RMW கட்டுநாயக்காவில் கடை மட்டம் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு வசதிகளின் தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 53.50 | நடவடிக்கையில் உள்ளது | பாதீட்டு வரையறை காரணமாக |
| இவிப இன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உகந்ததான உள்ளக / வெளியக LED பெனலினை ஏற்பாடு செய்தல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 14.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| இவிப பலாலி, கண்டி, நுவரெலியா, இரணைமடு மற்றும் ஹிங்குராக்கொடையில் உள்ள பயணிகள் முனையத்தில் அனுமதியின்றி உட்பிரவேசிப்பவர்களைக் கட்டுபிடிக்கும் முறைமைகளின் தாபிப்பு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 16.50 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| மொத்த ராடர் இயங்கு பரப்பிற்குமாக மேலதிகமான YLC-18 ராடரை கொள்வனவு செய்தலும் இருக்கின்ற ராடர்களை மீள் இடப்படுத்தலும் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 500.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |
| இருக்கின்ற USFM ராடர் முறைமையை மாற்றீடு செய்வதற்காக தீக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொள்வனவு செய்தல் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. 1,800.00 | ஆரம்பிக்கப் படவில்லை | பாதீட்டு வரையறை காரணமாக |

**அட்டவணை: 9**

## e. வழங்கல்கள் பணிப்பகம்

இந்தப் பணிப்பகமானது சகல விமானப் படை நடவடிக்கைகள், பயிற்சி, நிருவாகம் மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள் போன்றவை வினைத்திறனுடன் நடைபெறுவதற்குத் தேவையான வழங்கல் உதவிகளை வழங்குவதற்கு இவிப இல் தாபிக்கப்பட்டிருக்கிறது.

2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வழங்கல்கள் பணிப்பகமானது அதனது வழங்கல் நடவடிக்கைகளுக்காக 6259.32 மில்லியன் இலங்கை ரூபாய்களை எறிவு செய்திருந்தது. இது பாதீட்டு ஒதுக்கீட்டில் இருந்தான 5,114.43 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் ஏற்பாட்டுத் தொகையான 1,144.89 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் கொண்டிருக்கிறது. எறிவு செய்யப்பட்டதில் பலவற்றை ஆண்டின் காலப் பகுதியில் அடைவதற்கு பணிப்பகத்தால் முடிந்திருந்தது. வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் உண்மையான ஆற்றுகைகள் ஒப்பிடப்பட்டு விபரம் கீழே தரப்படுகிறது.

| பணிப்பகத்தின் முக்கிய நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரூ.மில்.) | கூடுதல் ஏற்பாடுகள் | நிகர ஒதுக்கீடு | உண்மைக் கிரயம் |
|---|---|---|---|---|
| வழக்கமுறை உணவுகள் | 1,997.93 | 1480.09 | 1,997.93 | 3,478.02 |
| வழக்கமுறை உணவுகள் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது 1,480.09 | | | |
| எரிபொருள் மசகு எண்ணெய் | 1,800.00 | | 1,800.00 | 1,676.46 |
| எரிபொருள் மசகு எண்ணெய் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>1,400.00 | | | |
| மீள் எரிபொருளிடல் உபகரணம் | 10.00 | | 10.00 | 17.21 |
| மீள் எரிபொருளிடல் உபகரணம் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>243.00 | | | |
| படையினர் குடியிருப்பின் பழுதுபார்ப்பு | 10.00 | | 10.00 | 8.44 |
| படையினர் குடியிருப்பின் பழுதுபார்ப்பு | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>9.76 | | | |
| படையினர் குடியிருப்பின் உபகரணம் | 25.00 | | 25.00 | 25.60 |
| படையினர் குடியிருப்பின் உபகரணம் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>103.56 | | | |
| உணவு பரிமாறும் உபகரணம் | 20.00 | **50.00**<br>**(வாக்கு மாற்றம்)** | **70.00** | **83.02** |

| | | | | |
|---|---|---|---|---|
| உணவு பரிமாறும் உபகரணம் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>30.46 | | | |
| காகிதாதிகளும் அலுவலகத்திற்குத் தேவையானவையும் | 18.50 | | 18.50 | 17.91 |
| காகிதாதிகளும் அலுவலகத்திற்குத் தேவையானவையும் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>7.86 | | | |
| சீருடைகள் | 1,002.00 | | 1,002.00 | 1,488.07 |
| சீருடைகள் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>802.08 | | | |
| ஏனைய உள்ளூர் வழங்கல்கள் | 80.00 | 40.00 | 120.00 | 112.66 |
| ஏனைய உள்ளூர் வழங்கல்கள் | கூடுதல் ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது<br>28.26 | | | |
| தையல் இயந்திரங்களின் பராமரிப்புப் பழுதுபார்ப்பும் உணவு பரிமாறும் உபகரணமும் | 1.00 | | 1.00 | 1.01 |
| ஏனைய சேவை ஒப்பந்தம் தொடர்பானவை | 150.00 | | 150.00 | 152.16 |

**அட்டவணை: 10**

## f. நிருவாகப் பணிப்பகம்

இந்தப் பணிப்பகமானது இலங்கை விமானப் படையின் நிருவாகத்துடன் தொடர்புபட்ட சகல விடயங்களுக்கும் பொறுப்பாக உள்ளதுடன் பொது ஒழுக்கம், அதிகாரிகளின் விடயங்கள், படைவீரர்கள் / வீராங்கனைகளின் விடயங்கள், கொடுப்பனவு மற்றும் படிகள், நிறுவனம் சார்ந்த விடயங்கள் மற்றும் ஏனைய நிருவாக விடயங்கள் போன்றவற்றுடன் தொடர்புடையதான கடமைகளையும் ஆற்றுகின்றது.

2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இவிப இன் நடவடிக்கைத் திட்டத்தில் நிருவாகப் பணிப்பகமானது மூலதன உபகரணக் கொள்வனவு, காகிதாதிகளின் கொள்வனவு, சேவையினருக்கான தனிப்பட்ட ஊதியங்கள், படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குதல், நாட்டிற்குள்ளான போக்குவரத்து, மின்சாரம், நீர் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக 21,273.66 மில்லியன் இலங்கை ரூபாய்களை மதிப்பீடு செய்திருந்தது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிருவாகப் பணிப்பகமானது சம்பளமும் கூலிகளும் மற்றும் ஏனைய படிகள் ஆகியவற்றுக்காக 8,557.16 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் 11,880.00 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் செலவு செய்திருந்தது. மேலும், பணிப்பகமானது அலுவலக உபகரண பழுதுபார்ப்பிற்காக 1,053.63 மில்லியன் இலங்கை ரூபாய்களை செலவிட்டிருந்தது. பணிப்பகத்தின் மற்றுமொரு முக்கிய நடவடிக்கை மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணக் கொடுப்பனவு ஆகும். இது ஆண்டின் போது 640.51 மில்லியன் இலங்கை ரூபாய்களிலான விளைவினைக் கொண்டிருந்தது. மேலும், பணிப்பகமானது விருதுகள் மற்றும் இழப்பீடு / காப்புறுதி நஸ்டஈடு மற்றும் ஆதனக் கடன் வட்டிக்காக 59.49 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் 56.25 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் செலவிட்டிருந்தது. இதற்கான பாதீட்டுப் பெறுமதி முறையே 75 மில்லியன் இலங்கை ரூபாவாகவும் 60 மில்லியன் இலங்கை ரூபாவாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## g. சிவில் பொறியியல் பணிப்பகம்

(1) சிவில் பொறியியல் பணிப்பகமானது சிவில், இயந்திரவியல், மின்னியல் போன்ற பல்வேறு பெயர்களிலுமுள்ள பொறியியல் துறைகளினது சகல செயற்பாடுகளையும் ஆற்றுவதற்கு கொள்கைகளை வகுப்பதற்காக இலங்கை விமானப் படையில் தாபிக்கப்பட்டிருக்கிறது. பணிப்பகமானது தனது செயல் எல்லைக்குள் வரும் சகல பொறியியல் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப மனித வலு, ஏனைய பொருள் வளங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி என்பவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துகிறது.

(2) 2013 ஆம் ஆண்டு இவிப இன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் சிவில் நிருவாகப் பணிப்பகமானது அதன் சிவில், இயந்திரவியல், மின்னியல் சார்ந்த பொறியியல் நடவடிக்கைகளுக்காக 1,021.00 மில்லியன் இலங்கை ரூபாய்களை எறிவு செய்திருந்தது. இது இயந்திர மற்றும் மின்னியல் பொருட்களின் கொள்வனவு, வாகனப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும், சிவில் பொறியியலாளர் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துதல், சகல இவிப தாபிப்புகளினதும் இணைப்புகளினதும் மேம்படுத்தல்கள், ஓடுதளங்களின் புனரமைப்பு, இயந்திரங்களின் பராமரிப்பு, சிவில் பொறியியல் வேலைப் பட்டறை உபகரணக் கொள்வனவு, சிவில் பொறியியல் இயந்திரங்களின் பழுதுபார்ப்பு, பம்புகளின் கொள்வனவு, குளிரூட்டிகளும் மின் பிறப்பாக்கி களும், கட்டடத்தினதும் கடட்மைப்புகளினதும் நிர்மாணம் மற்றும் 2012 ஆம் ஆண்டு செயற்றிட்டங்களைத் தொடருதல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. ஆண்டிற்கான பணிப்பகத்தின் உண்மைக் கிரயம் 904.26 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இது பாதீட்டு மீதான 11% வேறுபாடான விளைவைக் கொண்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பணிப்பகமானது, வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எறிவு செய்யப்பட்ட அதிகமான நடவடிக்கைகளைச் செய்து முடித்திருக்கும் அதே வேளை சில செயற்றிட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில நடவடிக்கைகள் பல்வேறு காரணங்களால் ஆரம்பிக்கப்படவில்லை.

(3) 2013 இல் பணிப்பகமானது இயந்திரவியல் மற்றும் மின்னியல் பொருட்களின் கொள்வனவு, வாகனப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும், சிவில் பொறியியலாளர் இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துதல் போன்றவற்றுக்காக முறையே 25.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள், 20.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள், 30.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் என எறிவு செய்யப்பட்டிருந்த போதிலும் உண்மையான செலவுகளாக முறையே 19.82 மில்லியன் இலங்கை ரூபாய்கள், 22.58 மில்லியன் இலங்கை ரூபாய்கள், 12.91 மில்லியன் இலங்கை ரூபாய்கள் என்பன அமைந்திருந்தன. பணிப்பகமானது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சகல இவிப தாபனங்களினதும் இணைப்புகள் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 113.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் முற்கணிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் 73.09 மில்லியன் இலங்கை ரூபாய்களையே உண்மையில் செலவு செய்திருந்தது. மேலும் பணிப்பகமானது ஓடுதளங்களின் புனரமைப்புக்காக கூடுதல் ஏற்பாடான 150.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் உள்ளிட்ட 350.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் மதிப்பிடப்பட்டிருந்தன. ஆண்டின் காலப் பகுதியில் 300.12 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் இரணைமடு ஓடுதளம் மற்றும் அநுராதபுர இவிப தள ஓடுதளம் ஆகிய இரண்டும் பணிப்பகத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தன. பாதீட்டின் மீதான 22% வேறுபாட்டைக் கொண்டதான விளைவினை ஏற்படுத்தி, இயந்திராதிகளின் பராமரிப்பு, சிவில் பொறியியல் வேலைப் பட்டறை உபகரணங்களின் கொள்வனவு, சிவில் பொறியியல்

இயந்திராதிகளின் பழுதுபார்ப்பு, பம்புகள், குளிரூட்டிகள் மற்றும் மின் பிறப்பாக்கிகளின் கொள்வனவு போன்றவற்றுக்கு மொத்தமாக 61.20 மில்லியன் இலங்கை ரூபாய்களை பணிப்பகம் செலவிட்டிருந்தது. அதற்கப்பாலும், கட்டட மற்றும் கட்டமைப்புகளின் நிர்மாணத்திற்காக எறிவு செய்யப்பட்ட 64.25 மில்லியன் இலங்கை ரூபாய்களுடன் ஒப்பிடுகையில் இதற்காக 5.30 மில்லியன் இலங்கை ரூபாய்களையே பணிப்பகம் செலவிட்டிருந்தது. நடவடிக்கைத் திட்டத்தில் பணிப்பகமானது 2012 இலிருந்து தொடரப்பட்ட செயற்றிட்டங்களுக்காக 315.75 மில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் உண்மையில் 71.97 மில்லியன் இலங்கை ரூபாய்களையே செலவிட்டிருந்தது. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக சிவில் பொறியியல் பணிப்பகமானது 2013 ஆம் ஆண்டு நடவடிக்கைத் திட்டத்தில் எறிவு செய்யப்படாத முக்கிய நடவடிக்கைகள் சிலவற்றில் ஆர்வம் செலுத்தியதுடன் அதற்காக 337.20 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் செலவிட்டிருந்தது.

(4) **2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செய்யப்பட்ட முக்கிய நிர்மாணங்களும் தாபிப்புகளும்**

பணிப்பகத்தால் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நிர்மாணச் செயல் திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(a) இரணைமடு இவிப நிலையத்தில் ஓடுதளம் மற்றும் விமான நிலையம் என்பவற்றின் நிர்மாணம்**



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப 200 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் இவிப இன் இரணைமடு நிலையத்தில் ஒரு ஓடுதளத்தையும் விமான நிலையத்தையும் நிர்மாணிப்பதற்கு எறிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான செலவாக 262.62 மில்லியன் இலங்கை ரூபாய்கள் அமைந்திருந்தன. மேலுள்ள படம் இவிப இரணைமடுவில் ஓடுதள நிர்மாணத்தைக் காட்டுகிறது.

**(b) அநுராதபுர இவிப தளத்தில் ஓடுதள செயற்றிட்டத்தின் விரிவாக்கம்**



மேலும், இவிப ஆனது 40 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் அநுராதபுர இவிப தளத்தில் உள்ள ஓடுதள விரிவாக்கம் எனும் இன்னுமொரு செயற்றிட்டம் தொடர்பிலும் ஆர்வம் காட்டியிருந்தது.

### (c) இரத்மலானை இவிப தளத்தில் 4 ஆம் இலக்கப் படையணியின் விமானக் கொட்டகையின் மீதி வேலைகளின் பூர்த்தி



இரத்மலானை இவிப தளத்தில் 9.77 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டு செய்யப்பட்ட 4 ஆம் இலக்கப் படையணியின் விமானக் கொட்டகையின் மீதி வேலைகளை பூர்த்தி செய்தமை அடுத்த ஒரு முக்கிய செயற்றிட்டமாகும். மேலுள்ள படம் இரத்மலானை இவிப தளத்தில் 4 ஆம் இலக்கப் படையணியின் விமானக் கொட்டகை பூர்த்தியடைந்த தோற்றத்தைத் தருகிறது.

### (d) ஏக்கல இவிப நிலையத்தில் யுத்த கதாநாயகர்களின் நினைவுச் சின்ன நிர்மாணம்



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப யால் நிறைவு செய்யப் பட்ட யுத்த கதாநாயகர் களின் நினைவுச் சின்ன நிர்மாணமானது இன்னு மொரு மைல் கல்லாகும். இந்தச் செயற்றிட்டத்திற் காக 14.71 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவு செய்யப்பட்ட தோடு இது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலுள்ள படம் யுத்த கதாநாயகர்களின் நினைவுச் சின்னத்தைக் காட்டுகிறது.

### (e) இரத்மலானை இவிப தளத்தில் 50 m நீச்சல் தடாக நிர்மாணம்

மேலும், 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது இரத்மலானை இவிப தளத்தில் 50 m நீச்சல் தடாகத்தின் நிர்மாணத்திற்காக 9.47 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டிருந்தது. இச்செயற்றிட்டம் முன்னரே (2011 ஆம் ஆண்டு) ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் முடிவிலும் தொடர்ந்து நடவடிக்கையில் இருக்கின்றதொரு முக்கிய செயற்றிட்டமாகும்.

**(f) இரத்மலானை இவிப தள அதிகாரிகள் உணவகத்தை நவீனப்படுத்தல்**




இவிப ஆனது 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இரத்மலானை இவிப தள அதிகாரிகள் உணவகத்தை நவீனப்படுத்துவதற்காக 2.80 மில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருந்தது. இச்செயற்றிட் டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை ஒதுக்கீடு செய்யப் பட்ட பெறுமதியிலிருந்து சற்று வேறுபட்டதாகும். இத்தொகை 1.99 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இரத்மலானை இவிப தளத்தில் நவீனப்படுத்தப்பட்ட அதிகாரிகள் உணவகத்தை மேலுள்ள படம் காட்டுகிறது.


**(g) கொழும்பு இவிப நிலைய 100 வத்த பகுதியில் 2 அடுக்கு உருக்கினாலான கட்டட நிர்மாணம்**



ஆண்டின் காலப் பகுதியில் 5.37 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் கொழும்பு இவிப நிலைய 100 வத்த பகுதியில் 2 அடுக்கு உருக்கினாலான கட்டட நிர்மாணத்தில் இவிப ஆர்வம் காட்டியிருந்தது. இதற்கான ஒதுக்கீட்டுச் செலவு 6.00 மில்லியன் இலங்கை ரூபாய்களாக இருந்தது. 2 அடுக்கு உருக்கினாலான கட்டட த்தின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(h) செல்லக்கதிர்காம இவிப நிலையம் வீரவிலவில் ஒரு சமையல் அறையினதும் ஓய்வு அறையினதும் நிர்மாணம்**

நிர்மாணச் செயற்றிட்டத்தின் இன்னுமொரு அடைவாக செல்லக் கதிர்காம இவிப நிலையம் வீரவிலவில் 4.09 மில்லியன் இலங்கை



ரூபாய்கள் செலவில் அமைத்த ஒரு சமை யல் அறையும் ஓய்வு அறையும் காணப்படு கிறது. இச்செயற்றிட்டத் திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை 2.10 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இது 2013 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளது.

**(j) அம்பாறை இவிப நிலையத்தில் பரசூட் பயிற்சிப் பாடசாலையின் நிர்மாணம்**




2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப அம்பாறை நிலையத்தில் 3.03 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் பரசூட் பயிற்சிப் பாடசாலை நிர்மாணம் நடைபெற்றது. இதற்காக 21.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் செயற்றிட்ட வேலைகள் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இச்செயற் றிட்டத்தின் தோற்றத்தைப் படம் தருகிறது.

**(k) அம்பாறை இவிப நிலையத்தில் வான் அசைவுகள் கட்டடத்தின் நிர்மாணம்**



பரசூட் பயிற்சிப் பாடசாலையின் நிர்மாணத்திற்கு மேலதிகமாக இன்னுமொரு நிர்மாணச் செயற்றிட்டமான 1.13 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் நிர்மாணிக்கப்படும் வான் அசைவுகள் கட்டடம் மீது இவிப ஆர்வம் காட்டியிருந்தது. இந்தச் செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தி அடைந்திருந்தது. அம்பாறை இவிப நிலை யத்தில் நிர்மாணிக் கப்பட்ட வான் அசைவுகள் கட்டடத்தின் தோற்றத்தை படம் தருகிறது.

**(l) சிகிரியா இவிப நிலையத்தில் பிரதான காவல் அறையின் நிர்மாணம்**



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது சிகிரியா இவிப நிலையத் தில் பிரதான காவல் அறையின் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்திருந்தது. ஆரம்பத்தில் இச்செயற்றிட் டத்திற்காக 5.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் செயற்றிட்டம்

2.12 மில்லியன் இலங்கை ரூபாய்கள் பெறுமதியில் செய்து முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகை மீதப்படுத்தப்பட்டது. செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூரணமாக நிறைவு செய்யப்பட்டிருந்தது. சிகிரியா இவிப நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரதான காவல் அறையின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(m) சிகிரியா இவிப நிலையத்தில் VIP இற்கான மரவீடு நிர்மாணம்**



நிர்மாணிக்கப்பட்ட பிரதான காவல் அறைக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது சிகிரியா இவிப நிலையத்தில் VIP இற்கான மரவீட்டின் நிர்மாணத்தினைப் பூர்த்தி செய்திருந்தது. இதற்காக 5.34 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவாக 5.62 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவிடப்பட்டிருந்தன. இச்செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன் சிகிரியா இவிப நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட அந்த VIP மரவீட்டின் முகப்புத் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

**(n) நுவரெலியாவில் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான ஒரு விடுமுறை இல்லத்தின் நிர்மாணம்**



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப இன் சிவில் பொறியியலாளர்கள் பீதுருதாலகால இவிப நிலையத்தில் 10.98 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் நுவரெலியாவில் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான ஒரு விடுமுறை இல்லத்தினை நிர்மாணித்து முடித்துள்ளனர். செயற்றிட்டமானது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கிறது.

**(o) இரணைமடு இவிப நிலையத்தில் கட்டளைத் தளபதிக்கான மரவீட்டின் நிர்மாணம்**



2.60 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் இரணைமடு இவிப நிலையத்தில் அமைக்கப்படும் கட்டளைத் தளபதிக்கான மரவீட்டின் நிர்மாணமானது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப சிவில்

பொறியியலாளர்களின் இன்னுமொரு நிறைவேற்றமாகும். இது முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலுள்ள படம் இரணைமடு இவிப நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட CMDR இனுடைய மர வீட்டின் தோற்றத்தைக் காட்டுகிறது.

**(p) பள்ளேகலவில் ஒரு விடுமுறை இல்லத்தின் நிர்மாணம்**



பள்ளேகலவில் விடுமுறை இல்லத்தினை நிர்மாணிப்பதற்கு 14.30 மில்லியன் இலங்கை ரூபாய்களை ஆரம்பத்தில் இவிப ஒதுக்கீடு செய்திருந்தது. எவ்வாறெனினும் இந்தச் செயற்றிட்டம் 11.65 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. மேலுள்ள படம் செயற்றிட்டத்தின் ஒரு தோற்றத்தைத் தருகிறது.

**(q) கொழும்பு இவிப நிலையத்தில் 04 ஆம் இலக்க 08 மாடி திருமணமானவர்களுக்கான தங்கு மனைத் தொகுதியின் நிர்மாணம்**



2013ம் ஆண்டு காலப் பகுதியில் இவிப, கொழும்பு இவிப நிலைய 04 ஆம் இலக்க 08 மாடி திருமணமானவர்களுக்கான தங்குமனைகளின் மீதி வேலைகளின் நிர்மாணத்திற்காக 179.24 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

எவ்வாறெனினும், 2014 பெப்ரவரியில் செயற்றிட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 20 அன்று குடியிருப்பதற்காக திறந்து வைக்கப்பட்டது.



பூர்த்தி செய்யப்பட்ட 4 ஆம் இலக்க குடிமனைக் கட்டடத்தின் தோற்றத்தைப் படம் காட்டுகிறது.

## h. பயிற்சிப் பணிப்பகம்

(1) பயிற்சிப் பணிப்பகமானது பயிற்சிக் கொள்கைகளை வகுத்தல், ஆரம்ப, அடிப்படை, உயர் தரப் பயிற்சிகள், விசேடமான மற்றும் அறிவுறுத்துநர் பயிற்சிகள், அதிகாரிகள் மற்றும் விமானப் படை வீரர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகள் போன்றவற்றைத் திட்டமிட்டு நடாத்துதல் போன்றவற்றுக்காக இவிப இல் தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிப்பகமானது சகல இவிப பயிற்சித் தாபனங்களிலும் அடையப்பெற்றவை மற்றும் பராமரிக்கப்பட்டவை என்பன உயர் தரத்தில் இருப்பதை நிச்சயப்படுத்தும்.

(2) பயிற்சிப் பணிப்பகம், சிறந்த தரமான சேவையை வழங்குவதை செம்மையாக்கும் நோக்கில் இலங்கை விமானப் படையினுள் பயிற்சி மற்றும் ஆளணியின் இயலுமையைக் கட்டியெழுப்புவதற்காக 2013 ஆம் ஆண்டிற்காக 271.17 மில்லியன் இலங்கை ரூபாய்களை எறிவு செய்திருந்தது. இது பாதீட்டு ஒதுக்கீடான 197.08 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் வெளிநாட்டுப் பயணங்கள், அறிவினை செம்மைப்படுத்தலும் நிறுவனமயப்படுத்தலும், உள்நாட்டு / வெளிநாட்டு சந்தா பங்களிப்பும் உறுப்பினரும், 2012 ஆம் ஆண்டிற்கான தவணைக் கொடுப்பனவுகள், அச்சிடுதலுக்கான காகிதாதிகள், அச்சிடுதலுக்காகப் பயன்படும் பொருட்கள், அச்சிடல் உபகரணம், பயிற்சி உதவிகள் மற்றும் பயிற்சி வேலைப் பட்டறை உபகரணங்கள் என்பவற்றுக்கான 74.09 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் உள்ளடக்குகிறது.

(3) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப ஆனது பைலட், விமானப் பொறியியலாளர்கள், சிவில் மற்றும் ஏனைய பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் ரெஜிமென்டல் அதிகாரிகள் போன்ற இவிப இல் வேறுபட்ட பதவிநிலையில் உள்ளவர்களுக் காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் இரண்டையும் நடத்தியிருந்தது. அதுமட்டுமன்றி சகல தர உத்தியோகத்தர்களுக்கும் அவர்களுடைய திறன் மட்டத்தை மேலுயர்த்தி உள்ளதுடன் இயலுமை யையும் கட்டியெழுப்பியுள்ளது. பயிற்சிப் பணிப்பகத்தின் பிரதான வகிபாகம் அரசாங்கத்திற்கு சேவை செய்வதற்கு பிரமிக்கத்தக்க செயற்பாட்டுடனான திறன்மிக்க இராணுவ ஆளணியினரை உருவாக்குவதாகும். பணிப்பகத்தால் வழங்கப்பட்ட பயிற்சிகளை இரண்டு வகைகளாக வகைப்படுத்த முடியும். அவையாவன,

### (a) உள்நாட்டுப் பயிற்சி

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவிப இனால் பயிற்சி மற்றும் இயலுமையைக் கட்டியெழுப்புவதற்காக 20.29 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் மொத்தமாக 196 உள்நாட்டுப் பாடநெறிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நாளுக்கு நாள் நடைபெறும் இயக்கங்களை ஊழியர்கள் ஆற்றுவதற்குத் தேவைப்பட்ட திறன்களின் சகல விடயங்களையும் உள்ளடக்கி நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களின் கீழ் பயிற்றப்பட்ட தனிநபர்களை இது உள்ளடக்குகிறது. பல்வேறு நிறுவனங்களின் கீழ் வழங்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் விபரங்களை பின்வரும் அட்டவணையால் விளக்க முடியும்.

| தொ/ இல. | பயிற்சி நிறுவகம் | பாடநெறி களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு (இல.ரூ.மில்.) |
|---|---|---|---|
| 1 | ஆசிய திரைப்பட நிலையம் | 1 | 0.06 |
| 2 | இலங்கை பொது நிதிக் கணக்குகள் கழகம் | 1 | 0.00 |
| 3 | தன்னியக்கப் பொறியியல் பயிற்சி | 1 | 0.22 |
| 4 | இலங்கை பார் சங்கம் | 1 | 0.03 |
| 5 | பிராண்டக்ஸ் கொலிச் ஒவ் குளோதிங் டெக்னோலொஜி | 1 | 0.02 |
| 6 | இயற்கை இருப்பிடத் திட்டம் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் | 1 | 0.01 |
| 7 | இலங்கை சமூக பல்மருத்துவக் கல்லூரி | 1 | 0.01 |
| 8 | பல் மருத்துவ, வாய் நோயியல் கல்லூரி | 1 | 0.02 |
| 9 | டென்சு செரமிக் டென்ரல் லபோரட்டரி | 1 | 0.01 |
| 10 | மொரட்டுவ பல்கலைக்கழக சிவில் பொறியியல் துறை | 1 | 0.04 |
| 11 | பொதுமக்கள் தொடர்பாடல் துறை | 1 | 0.04 |
| 12 | சமூகவியல், மானுடவியல் துறை | 1 | 0.05 |
| 13 | தேசிய சுவடிகள் திணைக்களம் | 1 | 0.00 |
| 14 | வரையறுக்கப்பட்ட தொலை நிலைக் கற்றல் நிலையம் | 1 | 0.04 |
| 15 | இலங்கை வணிக, கைத்தொழில் கழக சம்மேளனம் | 1 | 0.02 |
| 16 | கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் | 1 | 0.04 |
| 17 | பொது பல்மருத்துவ மருத்துவர் சங்கம் | 1 | 0.01 |
| 18 | இமேச் கன்சல்டன் அக்கடமி | 1 | 0.11 |
| 19 | வரையறுக்கப்பட்ட இலங்கை பதிப்பு மற்றும் வரைபட உருவாக்க இன்கிறின் நிறுவகம் | 1 | 0.18 |
| 20 | மனித வள மேம்பாட்டு நிறுவகம் | 1 | 0.09 |
| 21 | இலங்கை ஐக்கிய பொறியியலாளர்கள் நிறுவகம் | 1 | 0.01 |

| | | | |
|---|---|---|---|
| 22 | இன்ஸ்ரிடியுட் ஒவ் மோர்னிங் க்ளோறி கேக் ஸ்கூல் | 1 | 0.45 |
| 23 | பொது நிதி, கணக்காளர்கள் நிறுவகம் | 1 | 0.01 |
| 24 | மனுவல் திரபி ஸ்ரீ லங்கா | 1 | 0.02 |
| 25 | MC கியூர் றென்ஸ் அன்ட் ஜோன்ஸ் | 1 | 0.02 |
| 26 | தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை | 1 | 0.04 |
| 27 | NCO முகாமைத்துவப் பாடசாலை | 1 | 0.12 |
| 28 | நெற் அசிஸ்ட் இன்டநெஷனல் பிரை.லிமிட். | 1 | 0.10 |
| 29 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி | 1 | 0.02 |
| 30 | ஸ்ரீ லங்கா அக்கடமிக் அன்ட் கொஸ்மெற்றிக் டென்ரிக்ஸ் | 1 | 0.02 |
| 31 | ஸ்ரீ லங்கா எயார் லைன் லிமிட்டெட் | 1 | 0.26 |
| 32 | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | 1 | 0.03 |
| 33 | இலங்கை ரூபவாஹினி நிறுவகம் | 1 | 0.14 |
| 34 | டேன்கி IT பயிற்சி நிறுவகம் | 1 | 0.08 |
| 35 | களனிப் பல்கலைக்கழகம் | 1 | 0.06 |
| 36 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 1 | 0.12 |
| 37 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 1 | 0.03 |
| 38 | வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம், பத்தேகம | 1 | 0.11 |
| 39 | இலங்கை வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபை | 1 | 0.05 |
| 40 | வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம், இரத்மலானை | 1 | 0.02 |
| 41 | விஜயா கிராபிக்ஸ் (பிரை) லிமிட். | 1 | 0.08 |
| 42 | நிறுவகம் அல்லாதவை | 1 | 0.01 |
| 43 | நவீன தொழினுட்பவிய லுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவனம் | 2 | 0.09 |
| 44 | அணு சக்தி அதிகார சபை | 5 | 0.48 |

| | | | |
|---|---|---|---|
| 45 | பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி | 5 | 0.07 |
| 46 | நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் | 3 | 0.06 |
| 47 | பல்மருத்துவ உதவியாளர் பயிற்சிப் பாடசாலை, பேராதனை | 3 | 1.57 |
| 48 | நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம் | 6 | 0.11 |
| 49 | விநியோக மற்றும் மூலப்பொருள் முகாமைத்துவ நிறுவகம் | 7 | 0.85 |
| 50 | சர்வதேச விமானப் பயணச்சீட்டு அக்கடமி | 3 | 0.32 |
| 51 | கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் | 13 | 2.40 |
| 52 | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் | 13 | 0.91 |
| 53 | தேசிய கல்வி நிறுவகம் | 2 | 0.23 |
| 54 | தேசிய விளையாட்டுகள் விஞ்ஞான நிறுவகம் | 2 | 0.06 |
| 55 | ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை | 3 | 0.37 |
| 56 | வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 5 | 1.82 |
| 57 | இவிப அக்கடமி, சீனக்குடா | 4 | 0.33 |
| 58 | ஸ்ரீ லங்கா பவுண்டேசன் நிறுவகம் | 2 | 0.07 |
| 59 | இலங்கை தர மதிப்பீட்டு சபை | 3 | 0.04 |
| 60 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 2 | 0.45 |
| 61 | இலங்கை பல்மருத்துவ சங்கம் | 2 | 0.03 |
| 62 | ஸ்ரீ லங்கா பவுண்டேசன் நிறுவகம் | 14 | 0.31 |
| 63 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 2 | 0.54 |
| 64 | இலங்கை விநியோக மற்றும் மூலப்பொருள் முகாமைத்துவ நிறுவகம் | 2 | 0.17 |
| 65 | இலங்கை நூலக சங்கம் | 3 | 0.01 |
| 66 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் | 18 | 1.61 |
| 67 | ஸ்ரீ லங்கா ரெலிகொம் பயிற்சி நிலையம், வெலிசறை | 2 | 2.41 |

| | | | |
|---|---|---|---|
| 68 | கொழும்புப் பல்கலைக்கழகம் | 14 | 1.46 |
| 69 | வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, பத்தேகம | 3 | 0.27 |
| 70 | மொரட்டுவ பல்கலைக்கழகம் | 2 | 0.04 |
| 71 | சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா நிலையம் | 4 | 0.14 |
| 72 | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் | 2 | 0.04 |
| 73 | ஆளணி முகாமைத்துவ நிறுவகம் | 2 | 0.33 |
| 74 | சுங்க இல்லம், கொழும்பு | 2 | 0.06 |
| | **மொத்தம்** | **196** | **20.29** |

**அட்டவணை: 11**

## (b) வெளிநாட்டுப் பயிற்சி

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணிப்பகமானது வெளிநாட்டுப் பயிற்சிக்காக 1,641,216.62 அமெரிக்க டொலர்கள் செலவழித்துள்ளது. மொத்தமாக 102 அதிகாரிகளும் 266 விமானப் படை வீரர்களும் முறையே 796,426.76 மற்றும் 844,789.86 அமெரிக்க டொலர்கள் செலவில் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டுப் பயிற்சி பற்றிய விபரங்களை கீழ்வரும் அட்டவணை தருகிறது.

| நாடு | நடத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | செலவிடப்பட்ட மொத்தத் தொகை – அமெரிக்க டொலரில் | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகாரிகள் | விமானப் படை வீரர்கள் | அதிகாரிகள் | விமானப் படை வீரர்கள் | அதிகாரிகள் | விமானப் படை வீரர்கள் |
| இந்தியா | 40 | 50 | 89 | 171 | 134,118.50 | 490,202.00 |
| பாகிஸ்தான் | 62 | 44 | 122 | 76 | 191,682.50 | 310,787.50 |
| சீனா | 20 | 2 | 35 | 3 | 302,305.00 | 16,625.00 |
| துபாய் | 4 | - | 8 | - | 32,700.00 | - |
| இத்தாலி | 1 | 1 | 1 | 1 | 900.00 | 900.00 |
| ரஷ்யா | 2 | 1 | 4 | 11 | 16,060.00 | 19,580.00 |
| பங்களாதேஷ் | 7 | - | 8 | - | 22,257.00 | - |
| மலேசியா | 4 | 1 | 5 | 1 | 7,675.00 | 790.00 |
| சிங்கப்பூர் | 5 | - | 12 | - | 43,300.00 | - |
| அமெரிக்கா | 2 | - | 2 | - | 26,045.00 | - |
| லிதுவேனியா | 3 | 2 | 7 | 2 | 16,933.76 | 4,555.36 |
| தாய்லாந்து | 1 | - | 1 | - | 1,100.00 | - |
| வியட்நாம் | 1 | 1 | 1 | 1 | 1,350.00 | 1,350.00 |
| **மொத்தம்** | **152** | **102** | **295** | **266** | **796,426.76** | **844,789.86** |

**அட்டவணை: 12**

### j. சுகாதார சேவைகள் பணிப்பகம்

பயிற்சித் திறன் சார்ந்த முனைப்பான இராணுவப் படைக்கு பிரதான பங்களிப்பினை வழங்கும் ஒன்றாக சுகாதார சேவைகள் பணிப்பகம் (D of HS) இலங்கை விமானப் படையின் சுகாதாரத்தைப் பேணும் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக தொடர்ந்தும் இருக்கிறது. இவிப இன் சுகாதாரப் பராமரிப்பு எனும் பிரதான கொள்பணியினை முன்னெடுப்பதற்கு மேலதிகமாக D of HS ஆனது எங்களது வைத்தியசாலைகளில் ஆழ்ந்த நோயாளர் கவனிப்பு நடவடிக்கைகளை அதிகமாகக் கையாள்வதற்கு அவைகளின் இயலுமையை விருத்தி செய்வதற்கு மேலதிகமாக தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் இவிப இன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க, சுகாதார சேவைகள் பணிப்பகத்தின் ஒட்டுமொத்த பாதீடு 2,742.60 மில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இது பாதீட்டு ஒதுக்கீடுகளிலிருந்தான 4.00 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் ஏற்பாடுகளி லிருந்தான 2638.60 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் உள்ளடக்குகின்றது. 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பணிப்பகமானது கொழும்பு இவிப வைத்தியசாலையின் அபிவிருத்தி, இரத்மலானை இவிப தளத்திலுள்ள வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பகுதியின் அபிவிருத்தி, இவிப வைத்தியசாலைகளுக்கான பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் இவிப வைத்தியசாலைகளில் உள்ள மூலதன உபகரணங்களின் பழுதுபார்ப்பு போன்ற சில நடவடிக்கைகளை பாதீட்டு ஒதுக்கீட்டில் நிறைவேற்று வதற்கு எதிர்பார்த்தது. மேலும், எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் ஏற்பாடுகளிலிருந்து இரத்மலானை இவிப மற்றும் சீனக்குடா இவிப அக்கடமி என்பவற்றில் விமான அகப் பணியாளர் மருத்துவ சோதனைப் பகுதிகளில் அபிவிருத்தியையும் பராமரிப்பையும் முன்னெடுப்பதற்கும் ஏரோ மெடிக்கல் பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பணிப்பகம் எண்ணியிருந்தது. விபரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன.

#### (1) 2013 இல் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டு இவிப இன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எறிவுசெய்யப்பட்டிருந்த பின்வரும் நடவடிக்கைகள் ஆண்டினுள் பணிப்பகத்தால் அடையப்பெற்றன.

| பணிப்பகத்தின் முக்கிய நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரூ.மில்.) | நிகர ஒதுக்கீடு (இல.ரூ.மில்.) | உண்மைக் கிரயம் (இல.ரூ.மில்.) | நடவடிக்கை நிலை |
|---|---|---|---|---|
| கொழும்பு இவிப வைத்தியசாலையின் அபிவிருத்தி<br>- மருத்துவ உபகரணம் | 5.00 | 5.00 | 5.00 | பூர்த்தி |
| இவிப தள இரத்மலானை வைத்தியசாலை – அறுவைச் சிகிச்சைப் பகுதி அபிவிருத்தி (மருத்துவ உபகரணம்) | 5.00 | 5.00 | 5.00 | பூர்த்தி |
| இவிப வைத்தியசாலைகளுக்கான பயன்பாட்டுப் பொருட்கள் | 90.00 | 90.00 | 90.00 | பூர்த்தி |
| இவிப வைத்தியசாலை களின் மூலதன உபகரணப் பழுதுபார்ப்பு | 4.00 | 4.00 | 4.00 | பூர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| **<u>இரத்மலானை இவிப மற்றும் சீனக்குடா இவிப அக்கடமி என்பவற்றில் விமான அகப் பணியாளர்கள் மருத்துவ சோதனைப் பகுதிகளின் அபிவிருத்தியும் பராமரிப்பும்</u>** | | | | |
| இரத்த உறைவு பகுப்பாய்வுக் கருவி – 01, இவிப, இரத்மலானை | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (3.00) | 3.00 | 3.00 | பூர்த்தி |
| X-கதிர் நிலையங்கள் - 01 - 01, இவிப, இரத்மலானை | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (6.60) | 9.30 | 9.30 | பூர்த்தி |
| **<u>அர்ப்பணிக்கப்பட்ட மெடிவக் நிரந்தர இறக்கை விமானம்</u>** | | | | |
| மருத்துவ உபகரணம் | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (140.00) | 40.00 | 40.00 | பூர்த்தி |
| முல்லைத்தீவு மற்றும் இரணைமடு இவிப மருத்துவ நிலையங்களுக்கான மருத்துவ உபகரணம் | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (10.00) | 10.00 | 10.00 | பூர்த்தி |

**அட்டவணை: 13**

## (2) 2013 இல் பூர்த்தியடையாத பிரதான நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டு இவிப நடவடிக்கைத் திட்டத்தில் எறிவு செய்யப்பட்டிருந்த பின்வரும் நடவடிக்கைகளை ஆண்டின்போது எதிர் பார்க்கப்பட்ட கூடுதல் ஏற்பாடுகள் கிடைக்கப்பெறாத காரணத்தால் பணிப்பகத்தால் நிறைவு செய்ய முடியவில்லை.

| பணிப்பகத்தின் முக்கிய நடவடிக்கைகள் | பாதீட்டு ஒதுக்கீடு (இல.ரூ.மில்.) | நடவடிக்கை நிலை | குறிப்பு |
|---|---|---|---|
| **<u>இரத்மலானை இவிப மற்றும் சீனக்குடா இவிப அக்கடமி என்பவற்றில் விமான அகப் பணியாளர்கள் மருத்துவ சோதனைப் பகுதிகளின் அபிவிருத்தியும் பராமரிப்பும்</u>** | | | |
| உயிர்-இரசாயனவியல் பகுப்பாய்வுக் கருவி – 01, இவிப, இரத்மலானை | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது ( 2.50) | பூர்த்திசெய்யப் படவில்லை | மேலதிக நிதி கிடைக்கப் பெறவில்லை |
| EEG பதிவு முறைமை -01 - இவிப, இரத்மலானை | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (4.00) | பூர்த்திசெய்யப் படவில்லை | மேலதிக நிதி கிடைக்கப் பெறவில்லை |
| ஏரோ மெடிக்கல் பகுதிக்கான மருத்துவ உபகரணம், இவிப சீனக்குடா | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (2.00) | பூர்த்திசெய்யப் படவில்லை | மேலதிக நிதி கிடைக்கப் பெறவில்லை |
| **<u>ஏரோ மெடிக்கல் பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி</u>** | | | |
| சுழலாளி ஆய்கூடம் | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (2,470.00) | பூர்த்திசெய்யப் படவில்லை | மேலதிக நிதி கிடைக்கப் பெறவில்லை |
| இரண்டு இரவுநேரப் பார்வை மூக்குக்காண்ணாடிகளுடனான இரவுநேரப் பார்வை ஆய்கூடம் | கூடுதல் ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டது (0.50) | பூர்த்திசெய்யப் படவில்லை | மேலதிக நிதி கிடைக்கப் பெறவில்லை |

**அட்டவணை: 14**

## k. பல்மருத்துவ சேவைகள் பணிப்பகம்

இவிப இன் சௌகரியமான, தொழில்முறைத் தேர்ச்சி பெற்ற ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு இன்றியமையாத சுகாதார சேவை நிவாரணமாக பல்மருத்துவ சேவைகளை கிடைக்கச் செய்தல் வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பகமானது சகல இவிப தாபனங்களுக்கும் சேவையை விஸ்தரிக்கும் அதே வேளை பல்மருத்துவ சேவைகளின் தரத்தினையும் தொடர்ச்சியாக மேம்படுத்துகிறது.

பல்மருத்துவக் கட்டளைப் பிரிவின் மூன்று நடவடிக்கைகளின் நிறைவேற்றத்திற்கான 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு 10 மில்லியன் இலங்கை ரூபாய்களாக இருந்தது. கருத்திற் கொள்ளப்பட்டதன் கீழ் ஆண்டின்போது முக்கிய மூலதனப் பெறுகையானது 2013 ஆம் ஆண்டு இவிப வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எறிவு செய்யப்பட்டதான 0.803 மில்லியன் ரூபா பெறுமதியான பல்மருத்துவ சாதனங்களின் கொள்வனவு மற்றும் 0.122 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான அளவீட்டு இயந்திரக் கொள்வனவு என்பனவாகும். பாதீட்டு ஒதுக்கீட்டில் இருந்து 5.0 மில்லியன் இலங்கை ரூபாய்கள் மீண்டுவரும் தன்மைச் செலவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிகர ஒதுக்கீட்டிற்கு எதிரான செலவிடப்பட்ட உண்மைத் தொகையின் விகிதம் 67.9% ஆக தொடர்ந்தும் காணப்பட்டது. அலிக்னேற் கலவை, டிஜிடல் அளவு கருவி, மெழுகு இறக்குதல் பானை, டிப்லஸ்கிங் உளிகள், மெழுகு கருவி வெப்பமாக்கி, மத்திய வெற்றிட முறைமை, தன்னியக்க லேசர் ஊசித்துளை துளையிடுதல் கருவி, அமல்கம் கலவை, ஓட்டோகிளேவ் டேபிள் டொப் மற்றும் டென்ரல் அபெக்ஸ் லொகேற்றர் டன்ராமவுண்ட் ஆகியவற்றை போதியளவில் கையிருப்பில் வைத்திருப்பதற்கான கொள்வனவானது 2013 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டபோதிலும் அவை நிறைவு செய்யப்படவில்லை.

## l. நலன்புரிப் பணிப்பகம்

பணிப்பகமானது சகல படைச் சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய தர உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நலன்புரி விடயங்களுக்குப் பொறுப்பானதாகும். இதற்கு மேலதிகமாக, நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற ஆளணியினரின் புனர்வாழ்வு மற்றும் மீளவும் பணிக்கு அமர்த்துதல் என்பவற்றுடன் மனக் குறைகள் / கஷ்டங்கள் தொடர்பாகக் கவனித்தலும் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட ஆளணியினரின் குடும்பங்களின் நலன்புரி வசதிகளைக் கவனித்தலும் இதன் பொறுப்பாகும்.

துல்லியமாகக் கூறின், நலன்புரிப் பணிப்பகமானது படைச் சேவை ஆளணியினர், அவர்களுடைய குடும்பத்தினர், நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட ஆளணியினரின் குடும்பத்தினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நிதி சார்ந்த மற்றும் ஏனைய இன்றியமையாத நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு நலன்புரி நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் நிருவகித்தலின் பொறுப்புடனான கொள்பணியாகும்.

2013 இல் நலன்புரிப் பணிப்பகத்தின் அடைவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) இவிப ஆளணியினருக்கு வசதியாக கொழும்பு இவிப நிலையத்தில் 2013 ஏப்ரல் 11 ஆம் திகதியன்று இவிப புத்தாண்டுச் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(2) ஆண்டின் காலப் பகுதியில் பணிப்பகமானது தேசிய / சமயம் சார்ந்த விழாக்களின் ஏற்பாட்டிற்கு வெளிவாரி நிறுவனங்களுக்கு உதவியினை விரிவாக்கியிருந்தது.

(a) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்ற மைதானத்தில் 2013 மே 18 ஆம் திகதியன்று நடைபெற்ற தேசிய ரணவிரு நினைவேந்தல் நாள் விழாவுக்கு இவிப இற்கு பொறுப்பளிக்கப்பட்ட கொள்பணியை ஒருங்கிணைத்து நிறைவேற்றியது.

(b) கங்காராம விகாரையால் ஏற்பாடு செய்யப்பட்ட நவம் பெரகராவிற்காக இவிப இற்குப் பொறுப்பளிக்கப்பட்ட கொள்பணியை நிறைவேற்றியிருந்தது.

(c) வெசாக் முழு நோன்மதி போயா தின திருவிழா நடவடிக்கை யினைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பெரஹரவிற்கு நவம் மாவத்தை வீதியின் 2 கி.மீ. நீளமான இரு மருங்கிலும் கங்காராம விகாரையிலும் சோடனை மற்றும் ஒளியூட்டல் வேலை களை பணிப்பகம் செய்திருந்தது.

(d) வெசாக் முழு நோன்மதி தினத்திற்காக வெசாக் கூடுகளுடன் பௌத்தாலோக்க மாவத்தை, 2.5 கி.மீ. நவம் மாவத்தை, ஹவெலொக் வீதி ஆகியவற்றுக்கு பணிப்பகத்தால் சோடனையும் ஒளியூட்டலும் செய்யப்பட்டது.

(e) வெசாக் கொண்டாட்டத்திற்காக கிட்டத்தட்ட 1 கி.மீ. தூரம் சம்போதி விகாரைக்கு சோடனையும் ஒளியூட்டலும் பணிப்பகத்தால் செய்யப்பட்டது..

(f) 2013 பெப்ரவரி 24 அன்று பழைய சிலோன் பௌத்த காங்கிரசால் ஏற்பாடு செய்யப்பட்ட அனாதைச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டிக்காக 700 சாப்பாட்டுப் பொதிகளை பணிப்பகம் வழங்கியிருந்தது.

(g) 2013 யூன் 26 ஆம் திகதியன்று முல்லேரியா மனநல மருத்துவமனையில் 03 ஆம் இலக்க நோயாளர் விடுதியை இவிப புதிப்பித்திருந்தது.

(3) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணிப்பகமானது இவிப ரணவிரு உபகார இந்து சமய விழா, இவிப ரணவிரு உபகார கிறிஸ்தவ சமய விழா, இவிப ரணவிரு உபகார இஸ்லாம் சமய விழா போன்ற சில ரணவிரு நினைவேந்தல் சமய விழாக்களை ஏற்பாடு செய்திருந்தது.

(4) மேலும், நலன்புரிப் பணிப்பகமானது 10.40 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் சேவை ஆளணியினர் மற்றும் சிவில் ஊழியர்களின் பிள்ளைகளுக்காக அப்பியாசக் கொப்பிகளை வழங்கியிருந்தது.

(5) பணிப்பகமானது சிவில் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக 1.47 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டு பாடசாலைச் சீருடைகளைக் கொள்வனவு செய்ததுடன் 1.76 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் ஆரம்பப் பாடசாலைச் சீருடைகளையும் கொள்வனவு செய்திருந்தது.

(6) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணிப்பகமானது நாட்காட்டிகள் மற்றும் தினப் பதிவேடுகளின் விநியோகத்திற்காக முறையே 9.48 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் 5.95 மில்லியன் இலங்கை ரூபாய்களையும் செலவிட்டிருந்தது.

(7) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணிப்பகமானது குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல், மருத்துவ உதவி, கல்வி உதவி, சட்ட உதவி போன்ற நலன்புரி உதவிகளின் நடைமுறைப்படுத்தலில் ஆர்வம் காட்டியது.

(8) மேலும், ஆண்டின் காலப் பகுதியில் பணிப்பகமானது ‘‘நமக்காக நாம்’’ எனும் வீடமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் இவிப ஆளணியினருக்காக 59 வீடுகளின் நிர்மாணத்தில் ஆர்வம் காட்டியிருந்தது.

(9) ஆண்டின் காலப் பகுதியில் பணிப்பகமானது புத்த ரஸ்மி வெசாக் வலயம், தியவன்ன வெசாக் வலயம், மஹர கடவத்த வெசாக் வலயம், மாதிவெல கோட்டே ஐயம்பொறுவ கங்காதிலக விகாரை, சம்போதி வெசாக் வலயம் - பொத்தாலோக்க வெசாக் வலயம் போன்ற சில சமயம் சார்ந்த விழாக்களை நடத்தியிருந்தது.

(10) பணிப்பகமானது 2013 ஒக்ரோபர் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கண்டி தலதா மாளிகைக்கு தானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

(11) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணிப்பகம் 38.47 மில்லியன் இலங்கை ரூபாய்களை 1250 ஆளணியினருக்கு இறப்புக் கொடையாக வழங்கியிருக்கிறது.

(12) மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, பணிப்பகம் இவிப தாபனங்களுக்கு சங்கீத சாதனங்கள், விளையாட்டு மற்றும் மீளாக்கப் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளில் கவனம் செலுத்தியிருந்தது.

**m. நிதிப் பணிப்பகம்**

இது அரசாங்கத் திறைசேரியுடன் இணக்கமாக இவிப முகாமை செய்யும் சகல நிதி நடவடிக்கைகளினதும் ஒரு இன்றியமையாத செயற்பாடாகும். பணிப்பகமானது செலவு செய்யும் பாதையில் சகல பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கான திரவத்தன்மையானது நேரத்திற்குக் கிடைப்பதை நிச்சயப்படுத்தும்.

**n. சிவில் நிர்வாகப் பணிப்பகம்**

சிவில் நிர்வாகப் பணிப்பகத்தின் கடமையானது பல்வேறு பணிப்பகங்களின் கீழ் வரும் தேவையான சேவைகளை ஆற்றுவதற்கு சிவிலியன் ஊழியர்களை வழங்குவதற்காக இவிப இன் தளபதி சார்பாக கட்டுப்படுத்துவதாகும்.

**o. தரக் காப்பீட்டுக் கட்டளைப் பரிசீலனையகம்**

தரக் காப்பீட்டுக் கட்டளைப் பரிசீலனையகமானது இவிப இன் தரக் காப்பீட்டு (QA) சேவைகளின் நிர்வாகம் மற்றும் வினைத்திறனான செயற்பாட்டிற்காக விமானப் படையின் தளபதிக்கு பொறுப்புக்கூற வேண்டியதாகும்.

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் நடவடிக்கைகள் தரக் காப்பீட்டுக் கட்டளைப் பரிசீலனையகத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(1) வானூர்திசார் பொறியியல், பொதுப் பொறியியல், இலத்திரனியற் பொறியியல், ASD, விநியோக முன்னெடுப்புகள், தீ, EOD மற்றும் ATC கோபுரங்களின் சகல நிலை விடயங்களையும் உள்ளடக்குவதற்கு தரக் கணக்காய்வு தரிசிப்புகள் சகல தளங்கள் / நிலையங்கள் / அமைப்புகள் மற்றும் சீனக்குடா அக்கடமி என்பவற்றில் முன்னெடுக்கப்பட்டன.

(2) தனிப்பட்ட உளப்பாங்குகளை மாற்றுவதன் மூலம் வேலைத் தரம், தனிப்பட்ட அபிவிருத்தி, உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் கழிவுகளை வெளியேற்றல் போன்றவற்றை செம்மைப்படுத்துவதற்கு தளங்கள் / நிலையங்கள் மற்றும் சீனக்குடா அக்கடமி என்பவற்றின் இவிப ஆளணி யினரின் தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் / அளிக்கைகளை நடத்துதல்

(3) இலகுவான வள முகாமைத்துவத்திற்காக பின்வரும் விமானப் பொறியியலுடன் சம்பந்தப்பட்ட பொழிப்புகளை மாதாந்தம் தயாரித்து வானூர்திசார் பொறியியல் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

(a) விமானப் பறப்பு மணித்தியாலங்களும் பறப்புக்கான தகுதியும்
(b) பயன்பாட்டுக்குரிய பொருட்கள்

(4) தர மேம்பாடுகளின் மீதான நிகழ்ச்சித் திட்டங்கள் / வேலைப் பட்டறைகள் பின்வரும் பாடசாலைகளுக்காக இவிப CSR நிகழ்ச்சித் திட்டங்களாக நடத்தப்பட்டன.

(a) பன்னல தேசிய பாடசாலை
(b) வெல்லவ மத்திய கல்லூரி
(c) கணேவத்த மத்திய கல்லூரி

(5) ‘‘தேசத்திற்கு மகுடம் - 2013’’ எனும் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கண்காட்சிச் சாவடிகளின் ஒழுங்குபடுத்தல்கள் என்பன ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

(6) சகல தளங்கள், நிலையங்கள், சீனக்குடா அக்கடமி மற்றும் அலகுகளின் முழுமையான பங்குபற்றலுடன் ‘‘சர்வதேச தரங்கள் உறுதிப்படுத்தும் நேரான மாற்றம்’’ எனும் சுலோகத்தின் கீழ் தேசிய தர வார மற்றும் உலக தரங்கள் நாள் - 2013 நிகழ்ச்சித் திட்டத்தில் இவிப முனைப்புடன் பங்குபற்றியது. மேலுள்ளவற்றின் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் நாள் நெடுகிலும் ஏற்பாடு செய்யப்பட்டன. அத்துடன் இந் நிகழ்ச்சி இவிப இன் ஊடக நிலையத்தின் ஊடாக விமானப் படையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

## p. படைத்தலைவரின் தலைமையகம்

படைத் தலைவரின் தலைமையகமானது நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதற்கான அதனது நிறைவேற்றத்தில் விமானப் படையின் ஒழுக்கத்தினை நிச்சயப்படுத்துவதற்கு தாபிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படைத் தலைவரின் தலைமையகத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

| விபரம் | பிரச்சினை வகை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | மோசடி / அபகரிப்பு | முறைப்பாடு | திடீர் சோதனைகள் | வாகனச் சோதனைகள் | ஏனையவை (கவனயீனம், போதைப் பொருள், குடும்பப் பிரச்சினை) | |
| பிரச்சினைகளின் எண்ணிக்கை | 72 | 53 | 35 | 54 | 06 | **220** |
| F.252 நடவடிக்கை | 72 | 07 | 45 | 09 | 02 | **135** |
| நீதி விசாரணை | 01 | | | | | **01** |
| படைத்துறை முறை மன்றம் | 01 | | | | | **01** |
| சிவில் நீதிமன்றம் | 01 | | | | | **01** |

**அட்டவணை: 15**

## q. ஆட்சேர்த்தல் கட்டளைப் பிரிவு

ஆட்சேர்ப்பானது ஆட்சேர்ப்புக் கட்டளை அதிகாரியின் பொறுப்பாகும். ஆட்சேர்ப்புப் பகுதியின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளாவன, விமானப் படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட போதெல்லாம் இலங்கை வழக்க முறை மற்றும் தொண்டர் அடிப்படையிலான விமானப் படை வெற்றிடங்களுக்கு அதிகாரிகள், பெண் அதிகாரிகள், விமானப் படை வீரர்கள், விமானப் படை வீராங்கனைகள் ஆகியோரை நேரடியாக நிரப்புவதாகும். இந்த நோக்கமானது வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல், பத்திரிகை / தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் ஏனைய விசேட ஆட்சேர்ப்பு சாதனங்களினூடாக அடையப்பெறுகிறது.

3.5 மில்லியன் இலங்கை ரூபாய்கள் எனும் ஒரு கூடுதல் ஒதுக்கீட்டுடன் 2013 ஆம் ஆண்டிற்கான நிகர ஒதுக்கீடு 8.5 மில்லியன் இலங்கை ரூபாய்களாக இருந்த அதே நேரம் இலங்கை விமானப் படைக்கு வலது கரமாகவுள்ள ஆளணியினரின் ஆட்சேர்ப்பின் பொருட்டு ஆட்சேர்ப்புச் சாதனங்களுடன் தொடர்புபட்ட விளம்பரத்திற்காக 5.0 மில்லியன் இலங்கை ரூபாய்களை ஆட்சேர்ப்புக் கட்டளைப் பிரிவு ஒதுக்கியிருந்தது. 2013 ஆம் நிதியாண்டு காலப் பகுதியில் நிகர ஒதுக்கீட்டின் 99.29% எனும் ஒட்டுமொத்தப் பயன்பாட்டுடன் 8.44 மில்லியன் இலங்கை ரூபாய்கள் உண்மைச் செலவாக அமைந்திருந்தது.

இலங்கை விமானப் படையானது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 155 அதிகாரிகள் மற்றும் 2668 ஏனைய தர உத்தியோகத்தர்கள் என்றவாறு மொத்தம் 2823 ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. அதிகாரிகள் - தொழில் முறை சார்ந்த அதிகாரிகளின் நேரடி உள்ளீர்ப்பு, இவிப அதிகாரி பயில் இளவர்கள் மற்றும் KDU அதிகாரி பயில் இளவர்கள் எனும் மூன்று வகையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த அதே நேரம் ஏனைய தர உத்தியோகத்தர்கள் - ஏனைய தர

உத்தியோகத்தர் நேரடி உள்ளீர்ப்பு மற்றும் ஏனைய தர உத்தியோகத்தர் சாதாரண முறை உள்ளீர்ப்பு என்ற இரண்டு வகையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

| **ஆட்சேர்ப்பு வகை** | | **ஆண்டின் காலப்பகுதியில் திரட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|---|
| | | **வழக்க முறை** | **தொண்டர்** | **உப மொத்தம்** | **முழு மொத்தம்** |
| **அதிகாரிகள்** | நேரடி உள்ளீர்ப்பு அதிகாரிகள் | 35 | 32 | 67 | **155** |
| | இவிப அதிகாரி பயில் இளவர்கள் | 48 | - | 48 | |
| | KDU அதிகாரி பயில் இளவர்கள் | 40 | - | 40 | |
| **ஏனைய தரத்தினர்** | வி.ப. வீரர்கள் | 608 | 1,831 | 2,439 | **2,668** |
| | வி.ப. வீராங்கனைகள் | 120 | 60 | 180 | |
| | வி.ப. வீரர் / வீராங் கனைகளின் நேரடி உள்ளீர்ப்பு | 25 | 24 | 49 | |

**அட்டவணை: 16**

**r. ஊடக கட்டளை அலகு**

ஊடக கட்டளை அலகின் செயற்பாடு சார்ந்த வகிபாகம் பின்வருமாறு:

(1) இவிப இணையத்தளம் உள்ளடங்கலான பொது ஊடகத்திற்கு இவிப இன் உள்ளக / வெளியக நடவடிக்கையுடன் தொடர்புபட்ட சகல தகவல் களினதும் முகாமைத்துவமும் வெளியீடும்

(2) விளம்பரப்படுத்தல் தவிர்ந்த பொது ஊடகத்தினூடான இவிப இன் நடவடிக்கைத் தோற்றத்தைக் கட்டியெழுப்பல்

(3) CITO மற்றும் SLT உடனான இணக்கத்தில் இவிப இணையத்தள கட்டளை, கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம்

(4) பியசறா மும்மொழி காலாண்டு இதழின் திட்டமிடல், தகவல் சேகரித்தல், சரவையிடல் மற்றும் வெளியிடலும் அதனை உள்ளக ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்ட வெளியக உரிமையாண்மைகளுக்கும் விநியோகம் செய்தலும்

(5) இலத்திரனியல் வழிகளைப் பயன்படுத்தி முக்கியமான இவிப / தேசிய நிகழ்வுகள் தொடர்பான உள்ளக தகவல்களின் பரப்புரை

(6) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுடன் ஒருங்கிணைந்த தொடர்புகளைப் பேணுதல்

(7) உள்நாட்டு / வெளிநாட்டு ஊடகங்களின் கருத்துகள், மதிப்பீடுகள், ஆய்வுகள், இவிப உடன் தொடர்புபட்ட அம்சங்கள், அதனது நடவடிக்கை கள் போன்றவற்றை ஆய்வு செய்வதற்காக இணையத் தளங்கள் உட்பட

உள்நாட்டு / வெளிநாட்டு ஊடகங்களைக் கண்காணித்தலும் தளபதியின் வழிகாட்டலின் படி பொருத்தமான பிரதிபலிப்புகளை ஆயத்தப்படுத்தலும்.

**s. ஆய்வு, அபிவிருத்திக் கட்டளை அறை**

(1) ஆய்வு, அபிவிருத்திக் கட்டளை அறையானது (CRD Cell) 2011 மார்ச் தொடக்கம் இன்று வரை இருக்கிறது. CRD Cell இன் அடிப்படைக் கொள்பணியானது ஆய்வுகளை முன்னெடுத்து இவிப இன் நடவடிக்கை சார்ந்த, நிர்வாகம் சார்ந்த மற்றும் நலன்புரிச் செயற்பாடுகளின் சகல விடயங்களையும் மேம்படுத்துவதற்கான முறைகள் மற்றும் செயன்முறைகளை ஆக்குவதாகும். இவிப பணிப்பகங்கள், தாபனங்கள் மற்றும் அமைப்புகளால் தனிப்பட ஆரம்பிக்கப்பட்ட R&D செயற்றிட்டங் களுக்கும் CRD Cell ஆனது வசதியளிக்கிறது.

(2) இராணுவத்திற்கு முக்கியத்துவம் குறைந்த பாதீட்டு ஒதுக்கீடுகளுக்கு இடையில் சமாதான கால நடவடிக்கைகளின் உண்மைத் தன்மையை எதிர்கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் இவிப போருக்குப் பிந்திய அபிவிருத்திக்காக அரசாங்கம் மற்றும் இவிப தலைமையின் மேம்பாடடைதல் நோக்கத்திற்கு ஒரு துடிப்பான படையை CRD Cell கொண்டிருக்கிறது.

(3) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் CRD Cell இனால் பூர்த்தி செய்யப்பட்ட R&D செயற்றிட்டங்களின் ஒரு பொழிப்பு பின்வருமாறு:

(a) புதிய இவிப நோக்கு மற்றும் பணி கூற்றுகளின் ஆக்கம் பூர்த்தி செய்யப்பட்டது.

(b) அம்பாறையில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியில் இவிப R&D செயற்றிட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

(c) வடக்கு – கிழக்கில் ஓடுதள புனரமைப்புப் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கு ஒரு நடமாடும் தார் பொறியத்தை கொள்வனவு செய்து இவிப மாமடுவவில் நிறுவுகைக்கு வசதியளிக்கப்பட்டது.

(d) அக்குறகொடை DHQC செயற்றிட்டத்திற்காக குவாரி உற்பத்தி களின் செம்மையான உற்பத்திக்கு நவகமுவவில் இவிப குவாரிக்கு பிறேக்கர் வசதியுடனான இரண்டு 20 தொன் அகழ்பொறிகளின் கொள்வனவுக்கும் அங்குராப்பணத்திற்கும் வசதியளிக்கப்பட்டது.

(e) வறண்ட வலயங்களில் உள்ள இவிப தாபனங்களிலுள்ள நீரின் தரம் மீதான ஒரு ஆய்வு நடத்தப்பட்டதுடன் இத்தகைய தாபனங்களுக்காக நீர் தூய்மைப்படுத்தும் பொறியங்களுக்கான ஒரு தனித்த ஆக்கத் திட்ட வரைபு விருத்தி செய்யப்பட்டது. அத்தகைய முதலாவது பொறியமானது ஹிங்குராக்கொடை இவிப தளத்தில் பொருத்தப்பட்டு அது வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

(f) சகல வழித் தடங்களிலும் இபோச பேருந்துகளுடன் கூடுதல் இவிப தடையற்ற ஓட்டங்களுக்கு இபேச உடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல் அனைத்து பாவனையாளர்களுக்கும் சௌகரிய மாகவும் பேருந்துகளில் அதிகபட்ச பயன்பாட்டை நிச்சயப்படுத்து வதற்காகவும் சகல தடையற்ற வழித் தடங்களும் மீளாய்வுக்கு

உட்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இவிப இற்கான முக்கிய செலவு சேமிக்கப்படுகிறது.

(g) கிரியுல்லவில் இவிப இன் தனிப்பட்ட பாவனைக்காக குடிநீரைப் போத்தலில் அடைக்கும் ஒரு பொறியம் திட்டமிடப்பட்டு வடிவமைத்து நிறுவப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகள் அண்மையில் முடிவடைந்ததுடன் தொழிற்சாலை தனது செயற்பாட்டை 2014 மார்ச்சில் ஆரம்பிக்கும்.

(h) பராமரிப்பு மற்றும் வசதிகளுக்கான செலவினை ஈடுசெய்யும் முகமாக இவிப விடுமுறை இல்லங்கள் மற்றும் ஊடுகடப்பு (Transit) அறைகள் போன்றவற்றுக்கான வாடகைக் கட்டணங்கள் திருத்தப் பட்டுள்ளன. அத்துடன் ஒரு வெளிப்படையான பதிவு முறைமையின் அபிவிருத்தி உள்ளிட்ட விடுமுறை இல்லங்களின் நிர்வாகம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

(j) பின்வரும் முன்னணிப் பாடசாலைகளில் இளம் தலைவர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளன: றோயல் கல்லூரி, சென் பீற்றர்ஸ் கல்லூரி மற்றும் கண்டி தர்மராஜ கல்லூரி.

(k) சாரதி / ஓட்டுநர் இழப்பீட்டுக் காப்புறுதித் திட்டத்தை நிறுத்து வதற்கு கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் உருவாக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு பாரிய நலன்களை வழங்கக்கூடியதாக இருக்கும் பொதுவானதல்லாத ஒரு புது முயற்சியாக ஒரு திட்டம் மீள்நடை முறைப்படுத்தப்படுகிறது.

**t. விளையாட்டுக் கட்டளைப் பிரிவு**

(1) 2013 ஆம் ஆண்டிற்கான நிகர ஒதுக்கீடான 5.0 மில்லியன் இலங்கை ரூபாய்களை மீண்டுவரும் தன்மையான செலவுகள் மீது செலவழிப்பதற்கு விளையாட்டுக் கட்டளைப் பிரிவால் திட்டமிடப்பட்டது. எவ்வாறெனினும் அண்டிற்கான உண்மைச் செலவினமாக 5.93 மில்லியன் இலங்கை ரூபாய்கள் காணப்பட்டதுடன் இதில் 0.933 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஒதுக்கீட்டைவிட அதிகமாக இருக்கிறது. இந்த மேலதிகச் செலவானது முந்தைய ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்ட செயற்பொறுப்பால் நிகழ்ந்ததாகும்.

(2) விளையாட்டுக் கட்டளைப் பிரிவைக் கருத்திற் கொண்டான 2013 ஆம் ஆண்டிற்கான மூலதனப் பெறுகையானது 3.0 மில்லியன் இலங்கை ரூபாய்களுக்குப் பாதிடப்பட்டிருந்ததுடன் 92.96% எனும் ஒரு ஒட்டுமொத்த பயன்பாட்டு விகிதத்தைப் பேணியவாறு மூலதனப் பெறுகை மீதான செலவாக 2.789 மில்லியன் இலங்கை ரூபாய்கள் அமைந்திருந்தன.

**u. வான் புலனாய்வுப் பகுதி**

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வான் புலனாய்வுப் பகுதியினால் பின்வரும் வழக்கமுறை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

a. நடவடிக்கை குறித்தான பகுதிகளில் புலனாய்வு மற்றும் எதிர்ப் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

b. அதற்கிணங்க அபிவிருத்திகள் மற்றும் பரப்புரைகளிலுள்ள அச்சுறுத்தல் மதிப்பிடும் பகுப்பாய்வும் செய்யப்பட்டது.

c. தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் விரோதமான நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

d. அதிகாரிகள் மற்றும் விமானப் படை வீரர்களுக்கான பயிற்சிகளை நடாத்துதல்

e. ஏனைய புலனாய்வு முகவராண்மைகளுடன் புலனாய்வினை பகிர்ந்து கொள்ளல்

f. 343 புனர்வாழ்வு அளிக்கப்பட்ட எல்ரீரீஈ பதவியணியினரை நெருக்க மாகக் கண்காணித்தல்

g. படைக் கலங்கள் மற்றும் சட்டவிரோத மருந்துகளை மீட்டல்

v. **பறப்புப் பாதுகாப்பு கட்டளைப் பரிசீலனையகம்**

பறப்புப் பாதுகாப்பு கட்டளைப் பரிசீலனையக செயற்பாட்டு நடவடிக்கைகளை விரிவாக்கும் பொருட்டு விமானப் படைத் தளபதியின் அதிகார வரம்பின் கீழ் ஒரு சுயாதீன தாபனமாக பறப்புப் பாதுகாப்புக் கட்டளைப் பரிசீலனையகம் தாபிக்கப் பட்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் நடவடிக்கைகள் பறப்புப் பாதுகாப்புக் கட்டளைப் பரிசீலனையகத்தினால் முன்னெடுக்கப்பட்டன.

(1) மொத்தமாக 28 வருடாந்த பறப்புப் பாதுகாப்பு ஆய்வுகள் (அளவைகள்) சகல தளங்கள் / நிலையங்கள்/ பறப்பு அமைப்புகளில் முன்னெடுக்கப் பட்டன.

(2) பறப்பு அமைப்புகளில் மொத்தமாக 07 அட்டவணைப்படுத்தப்படாத பாதுகாப்பு மற்றும் தரப் பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டன.

(3) 2013 ஒக்ரோபர் 02 இல் பறப்புப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான பறப்புப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு வேலைப் பட்டறை நடத்தப்பட்டது.

(4) 2013 செப்ரம்பர் 30 இல் பறப்புப் பாதுகாப்பு பற்றிய சுவரொட்டிப் போட்டி நடத்தப்பட்டதுடன் பரிவு வழங்கும் வைபவம் 2013 ஆகஸ்ட் 07 இல் நடைபெற்றது.

(5) இவிப வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்பட்டதாக பறப்பு பாதுகாப்பு கட்டளை மாநாடு அமைந்திருந்தது.

(6) பின்வரும் நிகழ்வுகளின் போது ஆலோசனை சேவை வழங்குவதன் மீதான பறப்பு அமைப்புகளுக்கான தரிசிப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

(i) பயிற்சி கொர்மோறன்ட் (cormorant) இடைநிறுத்தத்திற்கு முன் 2013 செப்ரம்பர் 12 அன்று 07 ஆம் இலக்க படையணி

(ii) வான் வெளிக்கள காற்று தோன்றுவதற்கு முன் 2013 செப்ரம்பர் 08 அன்று 09 ஆம் இலக்க படையணி

## w. நலன்புரிச் செயற்றிட்ட வேளாண் கட்டளை அலகு

இலங்கை விமானப் படையின் நலன்புரிச் செயற்றிட்ட வேளாண் கட்டளை அலகானது விவசாயம், பண்ணை விலங்கு வளர்ப்பு மற்றும் நிறுவனத்தின் வர்த்தகம் சார்ந்த முயற்சிகள் என்பவற்றினை மேம்படுத்துவதற்காகவும் ஒருங்கிணைப்பதற்காகவும் அத்துடன் சேவைச் சமூகத்திலுள்ள சகல படைச் சேவை மற்றும் சிவில் ஆளணியினருக்கும் அதேபோன்று பொதுமக்களுக்கும் பண்ணை உற்பத்திகளை உற்பத்தி செய்து வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது. அலகானது கால்நடை மற்றும் அழகுசாதன பரப்புகளில் தொழில்முறை தேர்ச்சி யுடனான செயற்றிட்டங்கசளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நலன்புரி செயற்றிட்ட வேளாண் கட்டளை அலகினால் பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

| தொ/ இல. | எதிர்வுகூறப்பட்ட நடவடிக்கை | உண்மையான செயலாற்றுகை |
|---|---|---|
| 1 | கட்டுநாயக்கா இவிப தளத்தில் ஒரு புதிய சலூன் தாபிப்பு | 2013 சனவரி 31 அன்று முழுமையாக உபகரணமிடப்பட்ட நவீன சலூன் தாபிக்கப்பட்டது. |
| 2 | ஒரு புதிய செயற்றிட்ட முயற்சிக்காக ஒரு புதிய ஐஸ்கிறீம் மெஷின் கொள்வனவு | கட்டுநாயக்கா இவிப தளத்தில் வேளாண் கட்டளை பழக்கடை நிறுவப் பட்டது. சலுகை விலையில் சேவை ஆளணியினருக்கு ஐஸ்கிறீம் விற்பனை செய்யப்படுகிறது. |
| 3 | கட்டுநாயக்கா இவிப தளத்தின் வேளாண் அலகில் ஒரு புதிய குளிர்ச்சியான அறையினைத் தாபித்தல் | ஒவ்வொன்றும் 8 கி.கி. கொள்ளள வைக் கொண்ட இரண்டு றீபர் கண்ரெயினர்கள் 3,080,000.00 ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. இதனுடன் களஞ் சியத்தின் மொத்தக் கொள்வனவு 38,000 கி.கி. வரை உயர்ந்துள்ளது. |
| 4 | கட்டுநாயக்கா இவிப தள வேளாண் அலகிற்கு ஒரு புதிய பிளாஸ்ட் பிறீசர் (கெட்டியாக்கி) இன் கொள்வனவு | 2,549,220.00 ரூபா எனும் மொத்தச் செலவில் ஒரு புதிய பிளாஸ்ட் பிறீசர் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப் பட்டுள்ளது. |
| 5 | சிகிரியாவில் உள்ள விலங்குகளை இனப்பெருக்கத்திற்காக பாதுகாத்து வளர்க்கும் பண்ணைக்கு ஒரு புதிய குஞ்சிபொரிக்கும் கருவி கொள்வனவு | ஒரு புதிய தன்னியக்கமான குஞ்சி பொரிக்கும் அலகு (Setters and Hatchers) 1,816,000.00 ரூபா எனும் மொத்தச் செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 6 | கட்டுநாயக்கா இவிப தள வேளாண் அலகிற்கு குளிர் அறை/ பிளாஸ்ட் பிறீசருக்காக உருவாக்கப்பட்ட ஒரு ஆரம்ப மனையை நிறுவுதல் | ஒதுக்கீடு செய்யப்பட்ட உருவாக்கப் பட்டிருக்கும் மனையானது ஒரு புறொயிலர் வெட்டிடமாகவும் இறைச்சி பொதியிடல் அலகாகவும் பயன்படுத்து வதன் பொருட்டு வேளாண் கட்டளை அலகின் குளிர் களஞ்சியத்திற்கு சரிசெய்து நிறுவப்பட்டுள்ளது. புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட உணவு கெட்டியாக்கும் பெட்டிகளுக்காக ஒரு வேறான கூடாரம் அமைக்கப்பட்டிருந்த போது புதிய பிளாஸ்ட் பிறீசருக்கு முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளான பழைய ஒன்றுக்கு புதியதை மாற்றிப் பொருத்துவதற்கான ஒரு புதிய கூடாரத்திற்கான தேவை இருந்திருக்க வில்லை. |
| 7 | கட்டுநாயக்கா இவிப தள வேளாண் அலகில் ஒரு எண்ணெய் பிரிப்பு (spelling) செயற்றிட்டத்தைத் தாபித்தல் | தேவையான இயந்திராதிகள் கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் வேளாண் கட்டளை வெளியீட்டின் ஊடாக விற்பனை செய்யப்பட்டது. |
| 8 | வெளியிடங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பாலின் மூலம் கட்டு நாயக்கா வேளாண் அலகில் ஒரு பட்டர்/சீஸ் உற்பத்திச் செயற்றிட்டத்தை ஆரம்பித்தல் | பட்டர் தயாரிப்பு அடையப்பட்டிருக் கிறது. |
| 9 | கட்டுநாயக்கா இவிப தள வேளாண் அலகில் புறொயிலர் மடுவம் ஒன்றை நிறுவுதல் | முன்பு உருவாக்கப்பட்ட ஒரு கட்டடத்தை புறொயிலர் மடுவமாகவும் இறைச்சி பொதியிடல் அலகாகவும் பயன்படுத்துவதற்கு வேளாண் கட்டளை அலகின் குளிர் அறைகளு க்கு சரிசெய்து நிறுவப்பட்டிருக்கிறது. |
| 10 | விமானப் படைத் தலைமையக கணக் காய்வு அதிகாரிகளின் உதவியுடன் சகல செயற்றிட்டங்களுக்காகவும் முறை யான பெறுகை மற்றும் கணக்கீட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் | விமானப் படைத் தலைமையக கணக் காய்வு அதிகாரிகளின் உதவியுடன் சகல செயற்றிட்டங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட பெறுகை மற்றும் கணக்கீட்டு நடைமுறைகள் நிறுவப் பட்டுள்ளன. |
| 11 | ஓட்டோகற் வசதியுடன் கட்டுநாயக்கா இவிப வேளாண் இயற்கைக் காட்சி பொலிவூட்டல் அலகைத் தாபித்தல் | வேளாண் கட்டளை அலகு மற்றும் குவண்புர இவிப என்பவற்றில் இயற்கைக் காட்சி பொலிவூட்டல் அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன. |
| 12 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ட்ரக் அடிச் சட்ட கங்களை முழுமையான ட்ரக்காக மாற்றியமைத்தல் | G-3833 பிறீசர் ட்ரக்காக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.<br>G-3835 கார்கோ றூப் ட்ரக்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. |

**அட்டவணை: 17**

## x. அகக் கணக்காய்வுப் பிரிவு

(1) அகக் கணக்காய்வுப் பிரிவு (IAD) இலங்கை சனநாயகச் சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளில் வகுத்தமைக்கப்பட்ட சட்டத் தேவைப்பாடுகளின் நிறைவேற்றத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க, IAD ஆனது விமானப் படைத் தளபதிக்கு நேரடியாக அறிக்கையிடும் ஒரு பிரிவு என்பதுடன் அது அகக் கட்டளைக் கணக்காய்வாளரால் (CIA) தலைமை தாங்கப்படுகிறது. தொடர்ந்து, அகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வாளர்கள் அறிக்கையிடல் முறைமையின் சுயாதீனத் தன்மையை மேலும் பலப்படுத்த இவிப இன் ஒரு வேறான நிர்வாகக் கணக்காய்வுக் கிளையின் கீழ் இடப்படுத்தப்பட்டுள்ளனர்.

(2) **2013 ஆம் ஆண்டு காலப் பகுதி செயலாற்றுகை**

(a) 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் IAD ஆனது பொது நிதியினை உள்ளடக்கியதாக இவிப தாபனங்களில் கணக்காய்வினை நடாத்தியிருந்தது. குறிப்பாக பொது கட்டு நிதியினைக் கையாளல், களஞ்சிய முகாமைத்துவம், ஆளணி நிர்வாகம், சம்பளங்கள் மற்றும் கூலிகள், நிதி முறைமை அபிவிருத்தியின் மேம்பாடுகள் போன்ற பரப்புகளில் கணக்காய்வினை நடத்தியிருந்தது.

(b) IAD ஆனது இவிப நிறுவனத் திட்டம், வருடாந்த நடவடிக்கைத் திட்டம், உரிய திறைசேரிச் சுற்றுநிருபங்களுக்கு இயைபான செயலாற்றுகை அறிக்கை என்பவற்றை வெளியிடும் ஒரு முதன்மை சாதனமாக உள்ளது.

(c) உள்ளக முறைமை அபிவிருத்திப ங்குபற்றல் செயன்முறையில் IAD ஆனது இவிப இன் ஒரு நிலையான சொத்தின் அசைவுகளை பதிவு செய்வதற்கு இவிப இன் தகவல் தொழினுட்பவியல் அலகுடன் (ITU) இணைந்து செயலாற்றி ஒரு மென்பொருளினை விருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்ததுடன் நிலையான சொத்துகள் பதிவு முறை ஒன்று செயற்படுத்தத் தயாராக உள்ளது.

(d) இதன் பொருட்டு பிரிவினது மேலும் பலம் வாய்ந்த சுயாதீன செயற்பாட்டிற்காக, இவிப இன் கணக்காய்வு உதவிகளின் ஒரு புதிய தர வடிவத்திற்கு MOD & UD இற்கு ஒரு முன்மொழிவு செய்யப் பட்டிருக்கிறது.

(3) அகக் கணக்காய்வுப் பிரிவினது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கணக்காய்வாளர் நாயகத்தால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் பலவற்றுக்கு அறுதியான பதில்களை அளித்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்னைய ஆண்டிற்காக பதில் அளிக்கப்படாத இரண்டு ஐயவினாக்களும் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த 33 வரையான ஐயவினாக்களும் இருந்தன. விமானப் படையானது 2013 ஆம் ஆண்டினுள் மொத்தமாக 28 ஐயவினாக்களுக்குப் பதிலளித்திருந்தது. விபரங்கள் வருமாறு:

| விபரம் | ஐயவினாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்த மீதி ஐயவினாக்கள் | 02 |
| ஆண்டின் காலப் பகுதியில் பெறப்பட்ட ஐயவினாக்கள் | 33 |
| ஆண்டின் காலப் பகுதியில் அளிக்கப்பட்ட பதில்கள் | 28 |
| 2013 ஆம் ஆண்டு இறுதியில் மீதியாகவுள்ளவை (2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியானது) | 07 |

**அட்டவணை: 18**

## 9. திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2013

டிஜிஎஸ்ஏ - 1

### ஒதுக்கீட்டுக் கணக்கு - 2013

செலவினத் தலைப்பு இல.: 224 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : இலங்கை வான்படை

